ஜெர்மானியர்கள் சார்லிமேன் ராஜ்யத்தையோ, அல்லது 5-வது சார்லஸ் ராஜ்யத்தையோ புனருத்தாரணம் செய்யப்போவதாகப் பல்லவி பாடுகிருர்கள். இதாலியர்களும் இதற்கு பின்வாங்கவில்லை. அகஸ்தியச் சக்கரவர்த்திகளின் சாம்ராஜ்யம் அவர்கள் கண்முன் நிற்பதாகச் சொல்லுகிருர்கள். (சிடுக்குப் போன்ற படித்த நாஸுிக்கான ஜூலியஸ் ஸீஸர் எங்கே! தடிக் காட்டுமிருண்டி பெனிடோ முஸோலினி எங்கே!) இரண்டாவது பிலிப்பின் நாட்களை நினைத்து களுக்காணும்படி தற்காலத்திய ஸ்பெயினைச் செய்து வருகிருர்கள். பிரான்ஸ் விழுந்தவுடன் சர்வ தேசத்தாருக்கும் பாத்தியமுள்ள டாங்கியரைப் பிடித்துக் கொள்ளும்படி ஸ்பெயினைத் தூண்டினுர்கள். இப்பொழுதும் பிரான்ஸிடமிருந்து திருடிய ஒரு ஆபிரிக்க சாம்ராஜ்யத்தை ஸ்பெயினுக்கு அளிக்க உத்தேசிக்கிருர் கள். ஆபிரிக்காவில், பிரெஞ்சு மொராகோ, அல்ஜீரியாவின் ஒரு பாகம், பிரான்ஸுக்குச்சொந்தமான இன்னும் இதர இடங்களுமன்னியில், ஐரோப்பாவில் பிரனீஸ் மலைக்கு வடக்கேயுள்ள பிரான்ஸின் ஒரு பாகமும், மத்தியதரைக் கடலில் பிரான்ஸுக்குச் சொந்தமான இன்னும் சில தீவுகளும் ஸ்பெயினுக்குக் கொடுப்பதாகப் பேசியிருந்தாலும் அதிலும் ஒன்றும் ஆச்சரியமில்லை. அச்சு நாடு களின் ராஜ தந்திர முறைகளை இப்பொழுது உலகம் அறிந்துகொண்டு விட்டது. இதாலியானது பிரான்ஸுக்குச் சொந்தமான "நீஸ், ட்யுனிஷியா" இவைகள் மேல் கண் வைத்தபொழுது "நீஸும், ட்யுனிஷியாவும் இதாலியார்களுக்குத் தான்" என்று கூக்குரலிட்டது. அதேபோல், பிரான்ஸின் வீழ்ச்சிக்குப் பிறகு அச்சு தேசங்களின் தூண்டுதலின் பேரில் ஸ்பெயினிலும் பின் கண்டவாறு ஸ்பானிஷ் பத்திரிகைகள் ஒரு பிரசாரப் புழுதியைக் கிளப்பின: "போர்ச்சுகல் ஸ்பெயினுடன் சேரவேண்டும். ஜிப்ரால்டர் ஸ்பெயினுக்கு மீளவேண்டும். மத்தியதரைக் கடலில் ஸ்பெயினுக்கு தீவுகள் வேண்டும். அக் கடலில் ஸ்பெயின் ஆதிக்கம் அங்கீகரிக்கப்படவேண்டும். ஆபிரிக்காவில் ஸ்பெயினுக்கு ஏராளமான தேசங்கள் கொடுக்கப்படவேண்டும்."

சில காலமாக அச்சு தேசங்களின் நாட்டம் தென் அமெரிக்காபேரில் இருந்து வந்தது. ஸ்பெயினும் அமெரிக்காவிலிருந்த தன் காலனிகளை திருப்பிப் பெரலா மென்று பகல் கனவு காண்கிறது. தென் அமெரிக்காவில் ஐந்தாம்படையின்

சூழ்ச்சிகள் பலமாய் நடப்பதே இதற்குப் போதிய அத்தாக்ஷியாகும். எல்லா அமெரிக்காவினுடைய பொருளாதார சம்பந்தமாயும், யுத்த தற்காப்பு சம்பந்த மாயும் ஒரே கொள்கை இருக்கவேண்டுமென்று திட்டம் செய்ய ஐக்யநாடு சென்ற சில காலமாக முயற்சித்து வருகிறது. இதற்கு குறுக்கே ஜெர்மானியர் களுடையவும், இதாலியர்களுடையவும் கையாட்களாக இருந்துகொண்டு சில தென் அமெரிக்க குடியரசு நாடுகள் அநேக தொல்லைகளைக்கொடுத்தன.

இப்படியா, அப்படியா.

ஆனால், இந்த யுத்தத்தில் ஸ்பெயின் எதிர்காலத்தில் எந்தக் கட்சியில் இறங்கு மென்று ஜோஸ்யம் சொல்லுபவன் மிகவும் துணிவுள்ளவன். இப்பொழுதுதான் நான் மத்தியதரைக் கடலைப்பற்றிய ஒரு புஸ்தகத்தை வாசித்துமுடித்தேன். இதாலி யுத்தத்தில் தான் வெளியிட்ட நடுநிலைமை வகிக்குமென்ற தீர்மானத்தின் பேரில் அது எழுதப்பட்டிருந்தது. புஸ்தகத்தில் அச்சு மை காயக்கூடவில்லை. இதாலி ஜெர்மனியுடன் சேர்ந்துவிட்டது. எதிர்பார்த்தவைகள் இவ்வாறு கோளாறுகி முடிந்தாலும், அரசியல் நிபுணனும், பாமரனும் நடக்கப்போகும் சம்பவங்களைப்பற்றி கணக்கிடத்தான் வேண்டியிருக்கிறது. சற்று நம்பிக்கை தருவது இதுதான்—ஸ்பெயின் தங்கள் கட்சியில் சேர்ந்துவிட்டதாக இவ்வளவு ஜயபேரிகள் கொட்டியும் ஸ்பெயின் சண்டையிடாமலிருக்கத் தீர்மானித்திருப்ப தாகத் தோன்றுகிறது. 'அச்சு' ப்பத்திரிகைகள் ராஜ தந்திரத்தில் ஸ்பெயினை சண்டைக்கு இழுத்துவைத்துவிட்டதில் தங்கள் வெற்றியைக் கொண்டாடுவதை விட்டுவிட்டன. ஜெனரல் பிராங்கோவும் பதஷ்டக்காரனாக இல்லாமல், முன் பின் தீரயோசிக்கக்கூடியவன்போல் தோற்றுகிறான். அவனுடைய மைத்துனன் ஸீனர் ஸூனரோ, 'அச்சு' தூதர்களோ எவ்வளவு துரிதப்படுத்தியும் அவசரக் காரனாகத் தெரியவில்லை. இதற்குப் பலமான முகாந்தரங்கள் இருக்கின்றன. இங்கிலாந்துடன் நட்பு இன்று அல்ல, நேற்று அல்ல; நூற்றுக்கணக்கானது. உள்நாட்டு சண்டையின் புண்கள் ஆறி இன்னும் வடுகாணவில்லை. அதில் ஏற்பட்ட குரோத மாச்சர்யங்கள் அடங்கி, எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து தேசத்தை புனருத்தாரணம் செய்ய சமாதானமும், போதிய அவகாசமும் வேண்டும்; ஏராளமான பணமும் வேண்டும். முடைகாலங்களில் தாராளமாகக் கொடுத்துத வின இங்கிலாந்து அல்லது ஒருகால் அமெரிக்காவைத்தவிர வேறு யார் இப் பொழுது உதவிக்கு வருவார்கள்? ஜெர்மனியும், இதாலியும் உதவிக்கு வருவார் களா? இதனுடைய மற்றொரு அம்சம் இது. பிரிடிஷ் சாம்ராஜ்யம் என்ன, வேறு தேசங்கள் என்ன—முக்கியமாக ஐக்கிய நாடு என்ன, இவற்றிலிருந்து ஸ்பெயின் ஏராளமாக இறக்குமதி செய்துவருகிறது. 'மாஞ்செஸ்டர் கார்டியனின்' ராஜ தந்திர நிருபர் எழுதியதாவது: "இங்கிலாந்து ஸ்பெயினை கடல் முற்றுகையால் பட்டினி போடுவதாக எழுதுவது பொய். ஸ்பெயினின் சொந்த உபயோகத்துக்கு எம்மட்டும் உணவு தேவையோ, அதை இறக்குமதி செய்யும்படி அனுமதிக்க இங்கி லாந்து தயார். எண்ணெய் விஷயங்களிலும் அப்படியே." இது எதைக் காட்டு கிறது தெரியுமா? யுத்தத்தில் ஸ்பெயின் எதிரி கட்சியில் சேர்ந்தால் இங்கிலாந்து தன் கடலாதிக்கத்தால், அதைப் பட்டினியாக அடித்து, சரணடையச் செய்ய

முடியுமென்பதை. ஐரோப்பாவில் எல்லா நாடுகளையும்விட ஸ்பெயின் தன்னைக் கொண்டு பிழைக்க முடியாது. கடல் முற்றுகையால் பாதிக்கப்படும். போர்ச்சுகல் இங்கிலாந்து கட்சியைச் சேர்ந்தது. அதிலிருந்தும், ஜிப்ரால்டரிலிருந்தும், கடலோரங்களிலிருந்தும் ஸ்பெயினைத் தாக்குவது எளிது. இம்மூன்று முனைகளிலிருந்தும் இங்கிலாந்து பலமாக அடிக்கமுடியுமென்பதும், ஐக்ய நாட்டின் உறுதியும் ஸ்பெயினின் அதிகாரங்களை எச்சரிக்கின்றன.

ஸீனர் ஸுனர் ஐரோப்பாவில் இங்குமங்கும் போய்க்கொண்டிருக்கும் பொழுது ஜெனரல் பிராங்கோ தன் துருப்புக்களை ஒத்திகை செய்கையில் 'ஸ்பெயினைக் காப்பாற்ற 200,000 வீரர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள்' என்றான். 'அச்சு' நாடுகள் இங்கிலாந்தைக் குறித்து இது ஒரு பயமுறுத்துதல் என்று பிரகடனம் செய்தார்கள். இதற்குமாறாக நுட்பமாக கவனிக்கக்கூடியவர்கள், இது அச்சுக் கூட்டாளிகளுக்கு ஒரு எச்சரிக்கை என்று அபிப்பிராயப்படுகின்றனர். ஸ்பெயின் பேரால் ஜிப்ரால்டரை ஜெர்மனியோ, இதாலியோ கைப்பற்றி "அச்சு" ஐயிக் கும்பகூஷத்தில் ஜிப்ரால்டர் ஸ்பானியர்கள் வசம் கொடுபடமாட்டாதென்று அனேக பொறுப்புவாய்ந்த ஸ்பானியர்கள் பயப்படுகின்றனர். ஸ்பானியர்கள் மனதில் உள்நாட்டுச் சண்டை முடிந்தபின், இதாலிய சைன்யம் ஸ்பெயினைவிட்டு வெளியேறவேண்டுமென்று மற்ற தேசங்கள் வற்புறுத்தியும், இதாலி அவ்வாறு செய்யாமல் இருந்ததும், கடைசியில் எச்சரிக்கையின்பேரில் அவ்வாறு செய்ததும், ஸ்பானியர்களுக்கு மறக்கமுடியாத விஷயம்.

ஜிப்ரால்டர்.

ஜிப்ரால்டரின் பாதுகாப்பு என்னிலைமையிலிருக்கிறது? ஸ்பெயினின் உள்நாட்டுச் சண்டையின்போது அது மிகவும் கேவலமான ஸ்திதியில் இருந்தது. அதற்குப் பிறகு தற்காப்புகள் பலப்படுத்தப்பட்டன. டாகரைத் தாக்கியதற்குப் பர்த்தியாக பிரெஞ்சு விமானங்கள் ஜிப்ரால்டரைத் தாக்கியதைக் குறித்து லண்டனிலிருந்து வந்த ஒரு தந்தியை 13—10—40ல் இந்தியப் பத்திரிகைகள் வெளியிட்டன. அது பின் வருமாறு: "நியூஸ் கிரானிகிளின் விசேஷ நிருபர் ஜிப்ரால்டர் மீது பிரெஞ்சு தாக்குதல் உபயோகமில்லை என்பதை அடியில் வருமாறு வற்புறுத்துகிறார்: "ஜிப்ரால்டரின் போர்பலம் விமானத் தாக்குதலால் கொஞ்சம்கூட நிலைகுலையவில்லை. இது ராணுவ அதிகாரிகளின் அபிப்பிராயத்தைப் பொருத்ததுமட்டுமல்ல; நானே நேரில் கண்ணால் கண்டது. 25—9—40-ல் 100 பாம்பர் விமானங்களுக்குக் குறையாமல் வெகுநேரம் பிடிவாதமாகத் தாக்கியும் ஜிப்ரால்டரிலிருக்கும் யுத்த தளவாடமோ ஆயுதமோ ஒன்றுகூட அழிக்கப்படவில்லை. பல இடங்களிலிருந்து வரும் செய்திகள் அடியில்கண்ட விஷயங்களை வெளியாக்குகின்றன:—

(i) காபந்தில்லாத சில ஆபீஸ்களையும் சாதாரண கட்டடங்களையும் தவிர யுத்த தளங்களும், கொத்தளங்களும் குண்டு வீச்சுக்கு அசையவில்லை.

* * *

(iv) ஜிப்ரால்டரின் விமானப்படையெடுப்புப் பாதுகாப்புகளும், விமானப் படையும் திருப்திகரமாக வேலைசெய்தன."

ஒரே ஆபத்து.

ஸர் ஜார்ஜ்-டப்-சதர்லண்டு-டன்பார்-ஸ்பெயினுக்கு வரவிருக்கும் ஒரே ஆபத்தைப் பற்றிக் கூறுவதாவது:—“ஜெர்மனி தற்பொழுது ஸ்பெயினின் போக்கைக் குறித்து பலத்த நிர்ப்பந்தம் செய்யலாம் என்பதை கவனிக்காமலிருப்பது அசட்டுத்தனம்.” ஜெர்மானியரின் இழுவைக்கு ஸ்பெயின் ஒத்து வாராமலிருந்து விட்டால் வடக்கிலிருந்து அத்தேசத்தில் புகுந்து, நடுநிலைமை வகித்த அனேக நாடுகளுக்கு விளைவித்த கதியையே ஸ்பெயினுக்கும் விளைவிக்கலாம். நாம் கவனிக்க வேண்டிய விஷயம் மற்றொன்றும் உண்டு. “மத்தியதரைக் கடலின் கிழக்குக் கோடியில் பிரிடனுக்கு விரோதமாக ஏதாவது நேருமானால், அந்நிகழ்ச்சிகள் ஜெர்மன் கக்ஷிக்கு அனுகூலமான சில ராணுவக்கக்ஷிகள் என்ன, பலாங்கிஸ்டு கக்ஷி என்ன இந்த வட்டாரங்களிலிருந்து வரும் யுத்தத்தில் இறங்க வேண்டுமென்ற ஆஸ்தையை அதிகரித்து முடிவாக ஸ்பெயினை யுத்தத்தில் இறங்கச் செய்யும்.” (ம. கா. நிருபர்).

முடிவுரை.

இப்பொழுது புயல் மேற்கேயிருந்து கிழக்கே சென்றிருப்பதாகத் தோன்றுகிறது. நடுநிலைமை வகித்தல்தான் ஸ்பெயினுக்கு லாபகரமானது. வளர்கிற நாடாகிய அதனுடைய நியாயமான அபீஷ்டங்களை கிரேட் பிரிடன்தான் பூர்த்தி செய்துவைக்கமுடியும். தன்னலமும் புத்திசாலித்தனமும் இதையே சுட்டுகின்றன. யுத்தத்தில் ஸ்பெயின் இறங்கினாலும் அதனால் சில்லரைத் தொல்லைகள் விளையலாமே ஒழிய, அதன் ராணுவ பலத்தைக்கண்டு அஞ்சுவதற்கொன்றுமில்லை. பிரான்ஸ் விழுந்தவுடன் இதாலி “கிரேட் பிரிடன் நிலை குலைந்துவிட்டது, இனி அதற்கு அஞ்சவேண்டாம்” என்று எண்ணி, கொள்ளையில் பங்கு பெறுவதற்காக ஓடிவந்து யுத்தத்தில் சேர்ந்தது. ஆனால், தான் செய்தது பிசகென்று இப்பொழுது வருந்துகிறது. ஸ்பெயினை யுத்தத்திலிறங்கும்படி நமது சத்துருக்கள் தூண்டுதலும், நிர்ப்பந்தமும் செய்து வருவதும் வாஸ்தவம்தான்; ஆனால் இங்கிலாந்தின் கஷ்டங்களை சமாளிக்கும் சக்தியும், தினே தினே விருத்தியாகும் அன்னிய நாடுகளைத் தாக்கும் பலமும், அதன் சாம்ராஜ்யத்தின் அஞ்சக்கூடிய வன்மையும் சொல்லாமல் சொல்லி ஸ்பெயினை செவி சாய்க்கச் செய்யுமல்லவா? அச்சு நாடுகளால் உலக ஆதிக்கத்துக்காக நடத்தப்படும் இப்போர் சீக்கிரம் சமீப கிழக்கே (மத்திய தரைக்கடலின் கிழக்கேயும் எகிப்திலும்) நடைபெறலாம். அது முடிவடையும் முன்பும், அதற்கு வெகு காலத்துக்குப் பிறகும் ஸ்பெயின் யாதொரு விரோத நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாதென்று தோன்றுகிறது. அதை நிதானத்துடனும் பொறுமையுடனும் எதிர்பார்ப்போமாக.

வார யுத்தச் செய்திகள்.

(23—10—40 லிருந்து 30—10—40 வரை).

கிரீஸ்.—கிரீஸ் தேசத்தின்மேல் திடீரென்று, ஒரு காரணமில்லாமல் இதாலியானது திங்கட்கிழமை காலை படையெடுத்தது. இதுவே இந்த வாரத்திய முக்கியச் செய்தியாகும். கிரீஸ் எல்லையைத் தாண்டுவதற்கு, மூன்று மணிக்கு முன், அல்பேனியாவில் கலகத்தைக் கிளப்பி விட்டதாயும், பிரிடனுக்குச் சகாயம் செய்ததாயும் பொய்க்குத்தங்கள் சாட்டி, கிரீஸிலுள்ள ராணுவநிலயங்களைக் கேட்டது. இந்தச் சண்டைக்கு இழுக்கும் பேச்சை யுத்த-அறிக்கையென்றே கிரீஸ் கருதி யுத்தத்திலிறங்கி விட்டது.

கிரீஸோடு நேயமாயிருப்பதாக இதாலியானது 5 சமயங்களில், (அதாவது செப்டம்பர் 23, 1928, ஏப்ரல் 10, 1936, செப்டம்பர் 1938, செப்டம்பர் 20, 1939, ஜூன் 10, 1940) வாக்குக் கொடுத்ததை யெல்லாம் பொய்யாக்கி விட்டது. மேற்கண்ட 5-தேதிகளில் கடைசி சமயம் முஸோலினி பிரிடன் மேல் பகைமை கொண்டகாலம். அப்பொழுது ‘அயல்நாடுகளாகிய, ஸ்விட்ஸர்லாண்டு, யுகோஸ்லேவியா, துருக்கி, எகிப்த், கிரீஸ் தேசங்களை சண்டைக்கு இழுக்கமாட்டேன்; இது சத்தியம்’ என்று முஸோலினி உரக்கப்பேசி சத்தியம் செய்தார். சத்திய மெல்லாம் பறந்து போயிற்று.

பிரிடன்மேல் படையெடுக்கவும் எகிப்தில் முன்னேறவும் முடியாதுபோய், ஜெர்மனியும், இதாலியும் மற்றொரு நூதன காரியத்தைச்செய்து ஊரைக் கலக்க இப்போது கிரீஸ் தேசத்தின்மேல் படையெடுத்திருக்கின்றன. கிரீஸ் இப்பொழுது கேட்டுக்கொண்டிருக்கிறபடி பிரிடிஷ் உதவியானது சாத்தியப்பட்ட வரையில் வரப்போகிறது. முதலாவதாக சப்பல்-படை, கடல்-படையைச் சேர்ந்த விமானப்படை இவைகளின் உதவி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸலோனிக பக்கத்திலும், எபிரஸ் பக்கத்திலும் இதாலியப் படைகள் முன்னேறப் பார்க்கின்றன. ஆதென்ஸ், (தாதாய்-விமான-நிலயம் உள்பட) பெயர்போன காரின்த்-பாலம், பாட்ராஸ்-முதலிய இடங்களை இதாலிய விமானிகள் எதிர்க்கின்றனர். கார்புயூவுக்கப்பால் கிரீக் கப்பல்களும், இதாலியக் கப்பல்களும் கை கலந்ததாகப் பிரஸ்தாபம்.

பிரான்ஸ்.—வெறிபிடித்தால் போல் இங்குமங்கும் ஹிட்லர் நேயர்களைத் தேடிக்கொண்டு ஐரோப்பா முழுவதும் ஓடி அலைவதே ஜெர்மனியின் கக்ஷி களைப்பதற்கு அறிகுறியாகும். புதன்கிழமை யன்று 500 மைல் ரயில் பிரயாணம் செய்து, ஸ்பெயின் எல்லைப் புறத்தில் ஜெனரல் பிராங்கோவைச் சந்தித்தார். மறுநாள், பிரான்ஸில் ஒரு சிறு ரயில்வே ஸ்டேஷனில் மார்ஷல் பிடாயினைக் கண்டு பேசினார். பிறகு திங்கட்கிழமையன்று பிளாரென்ஸில், 700 மைல் பிரயாணம் செய்து முஸோலினியைச் சந்தித்தார். மலைமேல் இருக்கும் தன் மாளிகைக்கு, பிறதேசத் தலைவர்களை அழைத்துப் பேசிய காலமெல்லாம் போய் விட்டது. கர்வமும், அகம்பாவமும் குலைந்து, ஊரூராகப் போய் புதிதாக எவர்களை ஏமாற்றலாமென்று அலையும் காலம் வந்து விட்டது. பேராசை எல்லாம் அழிந்துபோகும் காலம் வந்துவிட்டது.

சமாதானத்துக்காக முயற்சி செய்வதுபோல் பாசாங்கு செய்து கொஞ்ச நாளாக எம்-லவால் பிரிடனுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து வருவது தெரிந்த விஷயம். ஆனால் இதற்கு எம்-பிடாயனும், விஷி ராஜாங்கமும் அவ்வளவு இடம் கொடுக்கவில்லை. இந்தக் காரியத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்கும், பிரெஞ்சு சைன்யங்களுக்கும், கப்பல்-படைக்கும் இஷ்டமில்லை. சென்ற வாரத்தில், மிஸ்டர் சர்ச்சில் வேண்டிய புத்திமதியைச் சொல்லி, செய்ய நினைத்திருக்கும் சூழ்ச்சியை நிறுத்தச் சொன்னார். சக்கரவர்த்தி மன்னர்பிரானும் தைர்யம் சொல்லி, முடிவில் வரப்போகும் வெற்றியில் பிரான்ஸுக்கு ஒரு பங்கு உண்டென்று வாக்களித்தார். பிரஸிடென்ட் ரூஸ்வெல்டும், அமெரிக்காவிலுள்ள பிரெஞ்சு நாடுகள் ஹவானா உத்தரவுப்படி பிரிக்கப்பட்டு அமெரிக்காவின் ரக்ஷணைக்குள் எடுத்துக்கொள்ளப்படுமென்று எச்சரிக்கை செய்தார். விஷி அரசாங்கம் இரண்டு தடவை ஸபைகூடி ஏதோ ஒரு விதமாய் முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. எல்லாம் வெகு ரகஸியமாயிருக்கிறது. எப்படியிருந்தபோதிலும் விஷி-கவர்ன்மெண்டு பிரிடனோடு சண்டை செய்யாது; பிரெஞ்சு-ராணுவங்களையும் கொடுக்காது; ஆனால் ஜெர்மனியோடு ஒத்துழைக்கச் சம்மதித்து மத்தியதரைக் கடலிலுள்ள ராணுவ நிலயங்களைப் பிரான்ஸ் விட்டுக்கொடுக்குமென்று தோன்றுகிறது. இதற்குப் பதிலாகப் பிரெஞ்சு-யுத்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு பிரெஞ்சுக் கவர்ன்மெண்டு மறுபடியும் பாரிஸுக்கு வரக்கூடும்.

இந்தியா.—யுத்த தளவாட—ஸப்ளை மிஷனுடைய தலைவர் ஸர் அலெக்ஸாண்டர் ரோஜர். இந்த மிஷனானது தென் ஆபிரிக்காவிலுள்ள யுத்த—வெடிமருந்து—தொழிற்சாலைகளைப் பார்த்துவிட்டு ஸெப்டம்பர் துவக்கத்தில் இந்தியாவுக்கு வந்து, பம்பாய், மதராஸ், பெங்கால், யூனைடெட்-பிராவின்ஸ், ஸென்டிரல்-பிராவின்ஸ், பீஹார் மாகாணங்களைச்சுற்றிப் பார்த்துவிட்டு ஒரு புத்தக ரூபமாய் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறது. அதன்படி யுத்த தளவாட தினுசுகளில் 40,000-க்கு 20,000 வகைகள் ஏற்கனவே இந்தியாவில் செய்யப்படுகின்றன. மற்றவைகளையும் செய்யவேண்டிய பிரயத்தனங்களை ஸப்ளை-இலாகா செய்து கொண்டிருக்கிறது.

ஸூயஸ் கால்வாய்க்குத் தெற்கிலும், கிழக்கிலும் உள்ள பிரிடிஷ் நாடுகளாகிய இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஸிலண்ட், தென் ஆபிரிக்கா, தென்-ரொடீஷ்யா, பர்மா, ஸிலோன், கிழ் ஆபிரிக்கா—குடியேற்ற நாடுகள், மலேயா, பாலஸ்தீனம், ஹாங்-காங் தேசங்களில் வசிக்கும் 5,000 லக்ஷம் ஜனங்களின் சார்பாக வந்த பிரதிநிதிகள் டில்லியில் 25-ம் தேதி வெள்ளிக்கிழமை கூடினார்கள். இது சரித்திரத்திலேயே ஒரு புதிய, மகத்தான பிரமேயமாகும். பிரிடிஷ் சாம்ராஜ்ய கீழ்நாடுகள் ஒன்றுகூடி யுத்தத் தளவாடங்களைச் சேகரிப்பதே இந்தச் சபையின் நோக்கம். நெதர்லண்ட்ஸ்—இண்டீஸ் பிரதிநிதிகள் இந்தச் சபையில் பிரசன்னமாயிருந்தார்கள். ரோஜர்—மிஷனும் இதில் கலந்துகொண்டது. இந்தக் கூட்டமானது சாம்ராஜ்யத்தின் அழுத்தமான ஜீவிய நிலைமையைக் காண்பிக்கிறது. எவ்விதம் ஒரு பிராணியின் ஒவ்வொரு நுண்ணிய அங்கமும், சமயத்துக்குத்தக்கவாறு மாறி சரீரத்துக்குவேண்டிய வேலைகளைச் செய்கின்றதோ

அம்மாதிரி, சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு அங்க-நாடும் சாம்ராஜ்யத்தின் நன்மைக்காக உழைக்கத்தலைப்பட்டிருக்கின்றது. இப்பொழுது யுத்த அவசாத்துக்காக அமைக்கப்பட்டாலும் இந்த சபை சமாதானகாலத்திலும் வேலை செய்து சாம்ராஜ்ய—கீழ்நாடுகளின் காரியங்களை இனிக்கவனிக்குமென்று எண்ணப்படுகிறது. இந்தச் சபையை ஆரம்பித்து வைக்கும்போது ஹிஸ் எக்ஸெலென்ஸி வைஸிராயவர்கள் பின்வருமாறு சொன்னார் :—“ இந்தச் சபையானது, பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் புது நோக்கங்களைக்கொண்டு அமைக்கப்பட்டது. உலகத்தின் ஒரு பாகத்தில் பிரிடன் எதிரியைத் தைரியமாய் எதிர்த்து நிற்கிறது. மற்றொரு பாகத்தில், கீழ்திசையில் பிரிடிஷ் ஜாதியாரும், அவர்களுடைய நேயர்களும் கூடி வெற்றி பெறுவதற்குவேண்டிய சாதனங்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் கவனத்தைக் கவரும் காக்ஷிகளாகின்றன. இதிலிருந்து மகத்தான பிரயோசனங்களேற்படப் போகின்றன. இதிலிருந்து ஏகாதிபத்தியத்தின் தீச்செயல்களும் அக்கிரமமும் அழியப்போகின்றன. இது வரையில் பழையகாலத்து சாம்ராஜ்யங்கள் அழிந்ததற்குக்காரணம் அவைகளுக்குள்ளேயிருந்த சில குறைகளாகும். ஆனால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் இம்மாதிரியான குறையொன்றும் கிடையாது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கிய தேசங்களுக்கெல்லாம் பொதுவான பிதுரார்ஜிதம் போன்ற ஒரு செல்வமுண்டு—அதாவது ஸ்வதந்திரம். இதை அடையவேண்டுமென்ற ஆசை பொதுவாயிருக்கிறது. இதை அடைவதற்காகவே ஒன்று சேர்ந்து ஸ்வதந்திரமென்ற செல்வம் பாதுகாக்கப்படுகிறது. ஸ்வதந்திரமானது இந்த ராஜீய நோக்கத்திற்கு அடிப்படையாக நிற்கிறது. இந்த ராஜீய தத்துவத்துக்குப் பெயர் பலவகைப்படலாம். ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு அளவில் சுயேச்சை ஏற்பட்டிருக்கலாம். பொதுப்படையாக ஸ்வதந்திரமே எல்லா தேசங்களின் நோக்கமாகும்.

ஆகையால், நாம் இந்தச் சபையின் முடிவுபெறும் காரியங்கள் தனித்தனி நபர்களுக்காகவோ, தேசங்களுக்கு மட்டுமோ இல்லை; இவை ஸ்வதந்திரத்தில் நம்பிக்கையைக்காட்டி, அதைப் பாதுகாக்க, ஸ்வதந்திரத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் கூடிச்செய்யும் பிரயத்தனங்களாகும்.

மதராஸ் யுத்த நிதி.—சென்ற சனிக்கிழமை வசூலோடு மதராஸ் யுத்த நிதியானது அரைக்கோடி ரூபாய்க்கு வந்துவிட்டது. இவ்வளவு பெரிய தொகை வேறு எந்த ராஜதானியிலும் இன்னும் வசூலிக்கப்படவில்லை. மூன்று விமானப் படைகள் வாங்க 41 லக்ஷரூபாய் இந்த நிதியிலிருந்து ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த நிதிக்குக் கொடுத்து உதவிய சிறு சந்தாதார்கள் கோடிக்கணக்காவார்கள். இதிலிருந்து யுத்தத்தின் நோக்கம் ஜனங்களறிந்து, யுத்தப் பிரயத்தனத்தில் பலர் ஈடு பட்டிருப்பது வெளியாகிறது. அரைக்கோடிரூபாய் பெரிய நிதியானாலும் இனிச்சும்மாயிருக்கக்கூடாது; ஒரு கோடியோ, இரண்டு கோடியோ சேர்த்துக்கொண்டு போகவேண்டும். நாள் ஒன்றுக்கு பிரிடன் 12 கோடி ரூபாயை யுத்தத்துக்காகச் செலவு செய்கிறது.

புதுக்கோட்டை நகரத்தார் யுத்த விமானம்.—வெள்ளிக்கிழமையன்று மேற்சொன்ன பெயர்கொண்ட விமானம் ஒன்றை வாங்குவதற்காகப் புதுக்கோட்டை நகரத்தார் 77,000 ரூபாயைச் சேர்த்து His Highness the Raja அவர்களிடம் சமர்ப்பித்தார்கள். இது புதுக்கோட்டைக்கே பெருமையைக் கொடுக்கும் தினமாகும். அதைப் பெற்றுக்கொண்டு His Highnes the Raja அவர்கள் பின்வருமாறு புகழ்ந்து பேசினார்:—"ஏற்கனவே யுத்த நிதிக்கு என் பிரஜைகள் கொடுத்திருக்கும் நிதியானது உயர்ந்துகொண்டு போகிறது. இப்பொழுது நீங்கள் சேர்த்திருக்கும் நன்கொடையானது பிரிடனுக்கு நெருக்கடியான சமயத்தில் பிறர் தூண்டாது, ஸ்வபாவமாய் உங்களுக்கிருக்கும் ராஜ விச்வாசத்தை அறிகுறியாய் நன்கு விளக்குகிறது. என் முன்னோர்கள் எவ்விதம் அவர்களுடைய பிரஜைகளுடைய விச்வாசத்தில் பெருமைகொண்டார்களோ அவ்விதமாக நானும் உங்களிடத்தில் இப்பொழுது பெருமை கொள்ளுகிறேன். நகரத்தார்களும், என்னுடைய உத்தியோகஸ்தர்களும் ஒன்று சேர்ந்து உழைத்ததின் பலனாக இப்பெரிய நிதியைத் திரட்டியதற்கு நான் உங்களை மெச்சுகிறேன்."

பிரிடிஷ் விமான எதிர்ப்புகள்.—ஜுலை மாதத்தில் பிரான்ஸ் தோற்றுப் போனவுடன் ஜெர்மனியில், வண்டிக்காரன் முதற்கொண்டு எல்லோரும் உலகத்தை பங்கு போட்டுக்கொள்ளுவதைப்பற்றி பேசத்தொடங்கிவிட்டார்கள். பிரிடனை படையெடுப்பதாகச் சொல்லி, ஜுலை, ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாதங்களில் போட்ட திட்டங்கள் வீணாய்ப்போனாலும், கடவுள் பிரத்யக்ஷமாவது எவ்வளவு அசாத்தியமோ அவ்வளவு நிச்சயமாய் ஜெர்மனிமேல் பிரிடிஷ் விமானங்கள் வராதென்று நம்பியிருந்தார்கள். ஆனால் அவைகள் வந்து குண்டுகளை வர்ஷித்ததின் மேல், ஏதோ, ஸ்விட்ஸர்லாண்டில், ரகஸ்யமாய் ஒரு நிலயத்தை பிரிடன் வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிறகு நஷ்டம் ஒன்றும் அதிகமாய் ஏற்படவில்லையென்று பொய் அறிக்கைகள் விடுவிக்கப்பட்டன. இப்பொழுதுதான் ஜெர்மானியர்களுக்குத் தங்களுக்கு வந்திருக்கும் ஆபத்து ஒருவாறாய்ப் புலப்படுகிறது. இந்த மாறுதலை ஏற்படுத்தியதின் பெருமை பிரிடிஷ்—விமானப்படையதாகும். இவைகளின் சக்தி நாளுக்கு நாள் அதிகப்பட்டு வெகு தூரங்களுக்குப் போய் எதிர்த்து வருகின்றன. இந்த வாரத்தில் இவைகள் வெகு தூரம் பரந்து சென்று அதிகச் சேதத்தை உண்டாக்கியிருக்கின்றன. பெர்லின் நகரத்தில் சார்லடன்பர்க் என்ற வாஸஸ்தலத்தில் இரண்டுநாள் அடுப்பெரிக்க வாயு (காஸ்) ஸப்ளை நின்றுவிட்டது. பூமிக்குள் ஓடும் ரயில்கள் நின்றுவிட்டன. ஞாயிற்றுக்கிழமையன்று பால்டிக் கரையிலிருந்து லீப்ஸிக்வரை விமானங்கள் எதிர்த்தன. 90 நிமிஷங்கள் வரை பெர்லின் தகர்க்கப்பட்டு அநேக இடங்கள் தீப்பிடித்துக்கொண்டன. மோயபிட் சக்தி யந்திரசாலை, புலிட்ஸர்ஸ்ட்ராஸ், லெக்ரடர் ரயில் ஸ்டேஷன், பிராண்டர்பர்க் விமான உற்பத்தி சாலைகள் சிதைந்தன. அதே இரவு 3,000 மைல் பிரயாணம் செய்து போலிட்ஸில் உள்ள நார்டெனஷ் ஹைடிரில்வர்க் எண்ணெய் சுத்திசெய்யும் சாலைகள் தகர்க்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமையன்று 750 மைல் தூரத்திலுள்ள பில்ஸன் நகரத்து ஸ்கோடா யுத்த ஸாமான் உற்பத்திசாலையை பிரிட்டிஷ் விமானங்கள் தகர்த்தன.

இதன் இறுதியில் கொடுத்திருக்கும் ஜாப்தாக்களை ஒப்பிட்டுப்பார்த்தால் பிரிடிஷ்-விமானப்படை யெடுப்பானது வரவர அதிகப்பட்டுவருவதும், ஜெர்மன் எதிர்ப்புக் குறைந்துவருவதும் நன்கு புலப்படும். பிரிடிஷ் விமானங்கள் இதாலியைப் படையெடுத்த காரணத்தாலோ, அல்லது எந்தக்காரணத்தாலோ, முதல் முதலாக, ஞாயிற்றுக்கிழமை இரவு இதாலிய விமானங்கள் சில பிரிடனுக்கு வந்தன. ஆனால் எந்த விமானங்களையும் அடித்துத்துரத்த பிரிடன் தயாராயிருக்கிறது. மிஸ்டர் அமரி சொல்லியபடி, ' சரித்திரத்தில் மிகப்பெரிதான இந்த பிரிடன்-சண்டையில் நாம் வெற்றியடைந்துவிட்டோம்: சண்டை இன்னும் சிறிதுகாலம் நடந்தாலும், முடிவில் நமக்கு வெற்றியென்று தெரிந்துவிட்டது.'

கடல் யுத்தம்—அக்டோபர் 20-21 இரவில் செங்கடலில் துணையோடு சென்ற சில பிரிடிஷ் கப்பல்கள் இரண்டு இதாலிய நாசகாரிகளைச் சந்தித்தன. பிரிடிஷ்-யுத்தக்கப்பல்கள் இவைகளை விரட்டின. இருட்டில் மறைந்து நின்ற ஒரு இதாலிய கப்பலாகிய பிரான்ஸிஸ்கோ நல்லோவை மறுநாள் காலையில் கண்டுபிடிக்க, அது 40 நிமிஷம் சண்டைசெய்து கரையில் மாட்டிக்கொண்டு, பிரிடிஷ் கப்பலாகிய கிம்பர்லியால் ஒரு டார்பிடோவைக்கொண்டு உடைக்கப்பட்டது. கரையிலிருந்த இரண்டு நில-பீரங்கிகளும் பழுதாக்கப்பட்டன.

ருமேனியா.—சில தேசங்கள் கூடிய சபையொன்று திங்கட்கிழமையன்று புகாரஸ்டில், டான்யூப் நதியில் கப்பல்-போக்கு வரத்து விஷயமாகச் சர்ச்சை செய்யக்கூடின. அதில் பல்கேரியா, ருமேனியா, யுகோஸ்லேவியா, ஸ்லொவேகியா, இதாலி, பிரதிநிதிகள் பொம்மைகளைப்போல் அங்கத்தினர்களாக அமைந்தார்கள். ஜெர்மனியும், ரஷியாவும் வைத்தது சட்டமாயிற்று, ரஷியாவானது இப்பொழுதுதான் இப்பேர்ப்பட்ட சபையில் அங்கத்தினராக வந்திருக்கிறது.

ருமேனியாவிலிருக்கும் பிரிடிஷ் கப்பல்களை ருமேனிய கவர்ன்மெண்டு சுவாதீனப்படுத்திக்கொண்டிருக்கிறது.

எகிப்து.—இதாலிய துருப்புகள் நிற்கும் இடங்களுக்குப் பின்னேயுள்ள, ஸிதி-எல்-பரானியிலிருந்து பென்காஸிவரை எல்லா ஸ்தலங்களையும் பிரிடிஷ் விமானங்கள் தகர்த்துவருகின்றன. பிரிடிஷ் யுத்த மந்திரி மிஸ்டர் ஈடன் எகிப்து அரசராகிய பரூக்கைச் சந்தித்துப் பிறகு பாலஸ்தீனத்தைப் பார்த்துவந்தார். இதாலிய துருப்புகளிலிருக்கும் முஸ்லிம் சிப்பாய்கள் எகிப்தின்மேல் படையெடுக்க மறுப்பதாகப் பிரஸ்தாபம்.

கீழ் தூர பிரதேசம்.—சைனா சேனாதிபதியாகிய மார்ஷல்-சியான்காய்-ஷேக் கோடு ஜப்பான் சமாதானப்பேச்சுகள் நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. சைனாவைவிட்டு அடியோடு ஜப்பானியர் நகர்ந்தாலொழிய சமாதானப் பேச்சு ஒன்றும் கிடையாதென்று சைனா சொல்லுகிறது.

மீகாங் நதியின் இரண்டு தொங்கு-பாலங்களை ஜப்பான் விமானங்கள் உடைத்துவிட்டதாக ஜப்பானியர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் பர்மா-ரஸ்தா தடைபட்டதாகக் காணோம். அக்டோபர் 23-ல் புறப்பட்ட லாரிகள்

பத்திரமாய் 3-தினங்களுக்குள்ளாகவே, 720 மைல் வந்து கும்மிங்கைச் சேர்ந்து விட்டன. இவ்வளவு சீக்கிரமாக இந்தப் பிரயாணம் இதுவரையில் நடந்ததில்லை.

நிலக்கரி, எண்ணெய், பாதரஸம் (50,000 பவுன் பெறுமானம்) இவைகளை ஜப்பானுக்கு மெக்ஸிகோ அனுப்பச்செய்திருந்த ஏற்பாட்டை இப்பொழுது மெக்ஸிகோ ரத்துசெய்துவிட்டது. மாங்கனீஸ், அன்டிமொனி இரும்பு-சேதாரம் இவைகளை விற்கவும் மறுத்துவிட்டது.

இந்து-சைனு முன்னொரு சமயம் எடுத்துக்கொண்ட பாகங்களைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் சண்டை செய்தாவது பிடுங்கிக்கொள்ளப்போவதாகத் தாய்லாண்டு சொல்லிக்கொண்டிருக்கிறது.

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
21—10—40. (திங்கட்கிழமை.)		
எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள்.—கெல்ஸன் கர்ச்சன் (Gelsenkirchen), வெஸ்ஸிடிங் (Wesseding).	......	எங்கும் பெருந்தீ சூழ்ந்தது.
எண்ணெய்க் கிடங்குகள், அலுமினியம் தொழிற்சாலை.—கிரீவன்ப்ராட்ச் (Grevenbrotch), லுனன் (Lunen).	......	பெரிய வெடிச்சத்தமும் தீயும் கிளம்பின.
துறைமுகங்கள்—புலாயின் (Boulogne), க்ரேவ்லைன்ஸ் (Gravelines).	......	சாமான் கிடங்குகள் நாசமாயின; ஒரு கப்பல் சேதம் ஆயிற்று.
விரோதியின் துணைக்காவல் கப்பல்கள்.—பிரஞ்சுக்(French) கடற்கரை.	......	ஒரு கப்பல் சேதமாக்கப் பட்டது.
ப்ளோம் (Blohm), வாஸ் (Voss) கப்பல் கட்டுமிடங்கள், கப்பற்படை நிலயம்.—ஹாம்பர்க் (Hamburg).	......	பல இடங்களில் தீப்பிடித்தது.
எண்ணெய் ஆலை.—ரீஷால்ஷ் (Reicholz) டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).	......	......
விமான நிலயம்—ஸ்டேடு (Stade) ...	......	சேதமாயிற்று.
பல தொழிற்சாலைகள்.—	......	......
விரோதியின் வேலையாட்கள், மோட்டார் வண்டிகள்.—ஸோலத் (Sollum) துக்கும் பாக் பாக் (Bag Bag)-குக்கும் நடுவில்.	......	பல ராணுவ போக்குவரத்து சாதனங்கள் தீக்கிரையாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
21—10—40. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	கட்டடங்கள், எண்ணெய்த் தோட்டிகள்.—அஸ்மாரா (Asmara), கூரா (Gura) இதாலிய கிழக்கு ஆபிரிக்காவி(Africa)ல் இருக்கும் பகர்தார் (Bahardar).	......	தீப்பிடித்தன.
	கட்டடங்கள்.—டெஸ்ஸேனி (Tessenie) ...		
	இதாலிய விமானங்கள்.—செங்கடல் (Red sea), கென்யா (Kenya) அபிஸீனியா (Abyssinia) எல்லை.	நஷ்டமில்லை.	2 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.
	இதாலிய நாசகாரி.—செங்கடல் (Red sea).	......	தீக்கிரையாகியது.
22—10—40. (செவ்வாய்க்கிழமை).			
	கால நிலைமை சரியாயில்லாததால் ஜெர்மனியின்மேல் இன்று விமானப் படையெடுப்பில்லை.		
	இதாலிய ஒத்தாசை சைன்யங்கள்.—பாக் பாக்கு (Bag Bag)-க்கும் ஸோலத் (Sollum) துக்கும் மத்தியில்.		பலருக்குக் காயம், பலத்த சேதம்.
	விமான நிலயம்.—அபிஸீனியாவி(Abyssinia)ல் டெஸ்ஸி (Dessie).		
	சாமான் கிடங்குகள்.—டானு (Tana) ஏரி.	......	தீப்பிடித்தன.
	அஸ்ஸாப்.—(Assab), பிரிகா (Birikau).	......	கட்டடங்கள் சேதமாயின.
	இதாலி முன்னேறியிருக்கும் இடங்கள்.—கஸாலா (Kassala).	......	வெடிச் சத்தங்கள் கிளம்பின.
23—10—40. (புதன்கிழமை).			
	பேர்லினர் (Berliner), **கிளிங்கன்பர்க் (Klingenberg), மின்சார உற்பத்திச் சாலைகள், டெம்பிள் ஹாப் (Templehof), புலிட்ஸர்ஸ்ட்ராஸ் (Pulitzerstrasse), லேர்டர் (Lehrter) சாமான் கிடங்குகள் இன்னும் மற்ற ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.**—பெர்லின் (Berlin) பிரதேசம்.	......	பல இடங்களில் தீப் பிடித்தது, வெடிச் சத்தங்களும் கிளம்பின; பலத்த சேதம் உண்டாயிற்று; பல கட்டடங்கள் தொழிற்சாலைகள் இடிந்து போயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
23—10—40.	(புதன்கிழமை)—தொடர்ச்சி.		
	கப்பல் நிற்குமிடங்கள், பக்கத்திலுள்ள ரயில்வண்டிகள் நிற்குமிடங்கள்.—எம்டன் (Emden).	......	பலத்த சேதம்.
	ரயில்வண்டிகள் நிறுத்திவைக்கப்படும் இடங்கள்.—பெர்லினுக் (Berlin)குக் கிழக்கே 50 மைலில்.		
	தொழிற்சாலைகள், ரயில்வே ஜங்ஷன்கள்.—ஜெர்மனியி (Germany)ன் வடக்கு மேற்குப் பாகங்கள்.	......	போக்கு வரத்து தடைபட்டுவிட்டது.
	சாமான் கிடங்குகள்.—ஹானோவர் (Hanover), பிராங்பர்ட் (Frankfurt).	......	தீப்பிடித்தன.
	எண்ணெய் ஆலைகள்.—மாக்டீபர்க் (Magdeburg), ஹானோவர் (Hanover).	......	தீப்பிடித்தன.
	விமான உற்பத்திச்சாலை.—வீமார் (Weimar).	......	சேதமாயிற்று,
	ஆலைகள்.—ப்ரன்ஸ்பட்டல் (Brunsbuttel), ப்ரமனுக் (Bremen)கு 40 மைல்கள் கிழக்கே.	......	அதிகச்சேதம்.
	கப்பல் நிற்குமிடங்கள். — ஹூக் ஆப் ஹாலந்து (Hook of Holland).	......	......
	பல விரோதி விமானநிலயங்கள், 2 சாமான் கப்பல்கள். — ப்ரிஸியன் (Frisian) தீவுகள்.	......	இரண்டும் மூழ்கடிக்கப்பட்டன.
	துணைக்காவலில் போகும் ஒரு கப்பல்.—டிராண்கீம் (Trondhjem).	1 விமானம்.	சுடப்பட்டது.
	இதாலிய துருப்புகள்.—டெஸ்ஸனி (Tessenie), கஸாலா (Kassala).	......	......
	கட்டடங்கள்.—மஸாவா (Massawa) வின் வடகிழக்குக்கோடி.	......	......
	கோண்டார் (Gondar).—அபிஸீனியாவில்	......	பெருந்தீ பிடித்தது.
	தரையிலிருக்கும் விமானங்கள்.—அஸ்மாரா (Asmara), கூரா (Gura), ஸிடி எல் பாரானி (Sidi el Barrani).	......	பல சேதமாயின.
	வேவு பார்த்தல்.-விரோதியின் பிரதேசம்.	நஷ்டமில்லை.	......

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
24—10—40. (வியாழக்கிழமை).			
	புலிட்ஸர்ஸ்ட்ராஸ்.—(Pulitzerstrasse).	......	மூன்று மணிநேரம் படையெடுப்பிருந்தது.
	லேர்டர் (Lehrter) சாமான் கிடங்குகள்.—இன்னும் மற்ற ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பெர்லினி (Berlin)ன் மத்தியபுரகம்.		பல இடங்களில் தீப்பிடித்தது. பலத்த சேதம் உண்டாயிற்று.
	கப்பல் நிற்குமிடங்கள், கப்பல்கள்.—ஹாம்பர்க் (Hamburg), ப்ரமர்ஹாவன் (Bremerhaven), ராட்டர்டாம் (Rotterdam), லெஹார் (Le Havre), லோரியண்ட் (Lorient), டூயிபர்க் (Duisberg).	......	எங்கும் பலத்த சேதம்.
	எண்ணெய் ஆலைகள்.—ஹாம்பர்க் (Hamburg), ஹானோவர் (Hanover), கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen).	2 விமானங்கள் சற்று சேதமாயின.	தீப்பிடித்தன.
	கடற்படை நிலயங்கள்.—கக்ஸ்ஹாவன் (Cuxhaven), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	பலத்த சேதம்.
	கப்பல் நிற்குமிடங்கள், கப்பல்கள்.-ப்ளஷிங் (Flushing), ஆஸ்டெண்ட் (Ostend), டன்கர்க் (Dunkirk), க்ரேவ்லைன்ஸ் (Gravelines), இஜ்மூய்டன் (Izmuiden) முதலிய இங்கிலீஷ் கால்வாயிலிருக்கும் துறைமுகங்கள்.	......	பல கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; அல்லது சிக்கிரையாயின. எங்கும் ஒரே தீ ஜ்வாலை.
	சாமான் கிடங்குகள்.—எம்மரிச் (Emmerich), மன்ஸ்டர் (Munster), ஆஸ்னப்ருக் (Osnabruck), ஹாம் (Hamm), ஹால்டர்ன (Haltern).	......	...... தீப்பிடித்தன.
	ரயில்வே ஜங்ஷன்கள்.-ப்ரமன் (Bremen), மன்ஸ்டர் (Munster), எம்மரிச் (Emmerich).	......	சீர்குலைந்தன.
	ரயில் பாதைகள்.–பொட்ராப் (Bottrop), ஸீடன்பர்க் (Seidenburg).	......	நாசமாயின.

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
24—10—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.		
மின்சார உற்பத்தி சாலை.—ஹாம்பர்க் (Hamburg).	......	சேதமடைந்தது.
உலைகள்.—பொட்ராப் (Bottrop) ...	......	தகர்க்கப்பட்டன.
ப்ளாம் (Blohm), வாஸ் (Voss) கப்பற் கட்டுமிடங்கள்.—ஹாம்பர்க் (Hamburg).	......	......
ஒரு தொழிற்சாலை, சாமான் கிடங்குகள்.—கலே (Calais)யிக்கருகில்	......	......
துணைக் காவல் கப்பல்கள்.—ஸீப்ரக்(Zeebrugge).	1 விமானம்,	......
விமான நிலயங்கள்.—ஜெர்மனி(Germany), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).	......	பல சேதமாயின.
துருப்புகள்.—கஸாலா (Kassala)வுக்கருகில்.	......	......
விரோதி துருப்புகள் தங்குமிடம், சாமான் கிடங்குகள். — அஸோஸோ (Azozo), கூரா (Gura), அஸ்மாரா (Asmara), பென்காஸி (Benghazi).	......	பென்காஸியில் பல கப்பல்கள் நாசமாயின.
விமான நிலயம்.—பெர்கா (Berka) ...	......	......
25—10—40. (வெள்ளிக்கிழமை).		
கப்பல் கட்டுமிடங்கள், கப்பல் நிற்குமிடங்கள், மின்சார உற்பத்திச்சாலைகள்.—கீல் (Kiel), ஹாம்பர்க் (Hamburg), ப்ரமன் (Bremen), கக்ஸ்ஹாவன் (Cuxhaven).	......	தவிடு பொடியாக்கப்பட்டன.
எண்ணெய் சேமித்திருக்கும் இடங்கள், சுத்தி செய்யுமிடங்கள். — ஹாம்பர்க் (Hamburg), ஹானோவர் (Hanover), ரீஷால்ஷ் (Reisholz).	......	தீக்கிரையாயின.
கப்பல்கள். — ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), டென்ஹெல்டர் (Den Helder), ஆஸ்டெண்ட் (Ostend), ஆண்ட்வர்ப் (Antwerp).	......	பல கப்பல்கள் சேதமாகியும், தீக்கிரையாகியும் போயின.

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
25—10—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
விரோதியின் பீரங்கிகள்.— காப்க்ரினே (Cap Gris Nez).	......	தகர்க்கப்பட்டன.
ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் சானல் (Channel) துறைமுகங்கள்.—புலாயின் (Boulogne), கலே (Calais) முதலிய மற்றும் பல துறைமுகங்கள்.	......	பலத்த சேதம்.
முக்கியமான விமான நிலயம்.—ஷீபால் (Schipol).	1 விமானம்.	சேதமாயிற்று.
கவசமணிந்த துருப்புகள்.—ஸிடி எல் பர்ரானி (Sidi el Barrani)க்குக்கிழக்கே.	......	மோட்டார்கள், வண்டிகள் நாசமாயின.
லிபியாவில் கடற்படை நிலயம்.—டொப்ருக் (Tobruk).	......	கடற்படையைச் சேர்ந்த கட்டடங்கள் இடிந்து போயின.
வேவு பார்த்தல்.—எரிடிரியா (Eritrea), இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (Africa).	......	......
26—10—40 (சனிக்கிழமை).		
வடக்கே ஒரு சுற்றுப்புற ஊரில் இருக்கும் விமான என்ஜின் உற்பத்திசாலே, மோயாபிட் (Moabit) மின்சார உற்பத்திசாலே, புலிட்ஸர்ஸ்ட்ராஸ் (Pulitzerstrasse), லேர்டர் (Lehrter), ரயில்வே சாமான் கிடங்குகள்; ஸ்பாண்டா (Spandau)-விலிருக்கும் பிராண்டன்பர்க் (Brandenburg), விமான என்ஜின் உற்பத்திசாலே.—பேர்லின் (Berlin) பிரதேசம்.	......	எங்கு பார்த்தாலும் ஒரே தீ மயம். பல கட்டடங்கள் சேதமாயின. எங்கும் பலத்த சேதம்.
நார்டன்ஸ்ச் (Norddensche), ஹைட்ரில் வேர்க் (Hydrilwerke), எண்ணெய் சுத்தி செய்யும் ஆலேகள்.—போலிட்ஸ் (Politz).	......	தீயும் வெடிச்சத்தங்களும் கிளம்பின.
எண்ணெய் ஆலேகள்.—லூனு (Leuna), கொலோன் (Cologne).	......	தீப்பிடித்தன.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
26—10—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	கப்பல் நிற்குமிடங்கள், கப்பல்கள்.—ஹாம்பர்க் (Hamburg), கக்ஸ்ஹாவன் (Cuxhaven), ப்ரமன் (Bremen), ஆண்ட்வர்ப் (Antwerp), கலே (Calais), டன்கர்க் (Dunkirk), புலாயின் (Boulogne).	......	பல கப்பல்களின் மேல் குண்டு வீழ்ந்தது.
	சாமான் கிடங்குகள்.—டூயிபர்க் (Duisburg).	......	தீப்பிடித்தன.
	ரயில் பாதைகள்.—டார்ட்மண்ட் (Dortmund), ப்ரஸ்ஸல்ஸ் (Brussels).		
	ரயில்வே ஸ்டேஷன்.—ஸெல்லி (Celle).	......	சேதமாகியது.
	ரயில்வே ஜங்ஷன், பாலங்கள்.—ப்ரமன் (Bremen).	......	நாசமாயின.
	14 விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), ப்ரான்ஸ் (France), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).	1 விமானம்.	......
	மின்சார உற்பத்திசாலை.-ப்ரெஸ்டு (Brest)	......	சேதமாயிற்று.
	சாமான் கப்பல்.—நார்வே (Norway) கடற்கரை.	2 விமானங்கள்.	மூழ்கடிக்கப் பட்டது. 1 விமானம்.
	காவல் புரிதல்.—வடகடல் (North sea).	......	1 விமானம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
22—10—40. (செவ்வாய்க்கிழமை).			
	பகலில்.—பல பட்டணங்கள். — தென் கிழக்குக்கடற்கரை (படையெடுப்பு பலமாயில்லை).	......	சில வீடுகள் இடிந்தன. சிலர் இறந்தனர்.

தேதி. எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
22—10—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
இரவில்.— லண்டன் (London) பிரதேசம், மிட்லண்ட்ஸ் (Midlands) தென் வேல்ஸ் (Wales), தென்மேற்கு இங்கிலாந்தி (England)ல் அங்குமிங்கும் சில இடங்கள்.—	.... 3 விமானங்கள்.	சேதம் அதிகமில்லை. காயம்பட்டவர்கள் சொற்பந்தான். 6 விமானங்கள்; 2 விமானிகள் உயிர் தப்பினர்.
அலெக்ஸாண்டிரியா (Alexaneria).	......	விரட்டியடிக்கப் பட்டனர்.
23—10—40. (புதன்கிழமை).		
பகலில்.—ஒரு பட்டணம்.—தெற்குக்கடற் கரை, லண்டன் (London) பிரதேசத்தில் இரண்டு இடங்கள், கெண்டி (Kent)ல் ஒரு பட்டணமும், மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம்.	......	சிற்சில இடங்களில் ஒரு ஒரு விமானம் தென்பட்டது. காயம்பட்டவர்கள் வெகு சொற்பம். சிலர் மாண்டனர். சேதம் மிகவும் சொற்பம்.
இரவில்.—லண்டன் (London), ஹோம் கவுண்டீஸ் (Home Counties), வடகிழக்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம்.	...... 1 விமானம்.	காயம்பட்டவர்களும் சேதமும் சொற்பம் தான். நஷ்டமில்லை.
24—10—40. (வியாழக்கிழமை).		
பகலில் (London) பிரதேசம், கெண்ட் (Kent), ஹாம்ஷயர் (Hampshire) ஸாமர்ஸெட்டில் ஒரு தக்கிராமம்	......	வீடுகள் இடிந்தன, சிலருக்குக்காயம்.
இரவில்.—லண்டன் (London) பிரதேசம் ஹோம் கவுண்டீஸ் (Home Counties)	...... 3 விமானங்கள்.	மிகச்சொற்பச் சேதம். நஷ்டமில்லை.
போர்ட் ஸெயிட் (Port Said)	......	ஒரு செம்படவன் இறந்தான். மற்றொருவனுக்குக் காயம்.
அலெக்ஸாண்டிரியா (Alexandria)	......	ஒரு ஸ்திரீ மாண்டாள் 3 ஸ்திரீகளுக்குக்காயம்.
25—10—40. (வெள்ளிக்கிழமை)		
பகலில்.—லண்டன் (London), கெண்டி (Kent)ல் சில உள்நாட்டுப் பட்டணங்கள், இங்கிலீஷ் கால்வாய்(English Channel) தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். சிலர் கொல்லப் பட்டனர்.

தேதி. எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
25—10—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
இரவில்.—லண்டன் (London) பிரதேசம்	......	பல இடங்களில் தீப் பிடித்தது. ஆனால் உடனே அணைத்து விட்டார்கள்.
மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒருபட்டணம், ஸ்காத்லாந்தி (Scotland)ன் கீழ்க்கரையில் பல இடங்கள்.	... .. 14 விமானங்கள்.	சில கட்டடங்கள் இடிந்தன. 10 விமானங்கள்; 7 விமானிகள் உயிர் தப்பினர்.
துணைகாவல் கப்பல்கள்.–இங்கிலீஷ் கால்வாய் (English Channel).	......	சேதமேயில்லை.
26—10—40. (சனிக்கிழமை).		
பகலில்:—லண்டன் (London) (சில எதிரி விமானங்களே தென்பட்டன), தென்கிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள், மேற்கு மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம்.	......	சேதமேயில்லை, சிலருக்குக் காயம், கட்டடங்களுக்குச் சொற்பச்சேதம்.
இரவில்:—லண்டன் (London), மிட்லண்ட்ஸி(Midlands)ல் ஒரு பட்டணம்,	......	தீப்பிடித்தது; ஆனால் உடனே அணைக்கப் பட்டுவிட்டது.
தென்கிழக்கு இங்கிலாந்தி(England)ல் பல இடங்கள்.	5 விமானங்கள்.	சிலருக்குக் காயம். 2 விமானங்கள்.
27—10—40. (ஞாயிற்றுக்கிழமை).		
பகலில்.—லண்டன் (London), ஹாம்ப்ஷயர் (Hampshire), தென்கிழக்கு இங்கிலாந்தி(England)ல் பல இடங்கள்.	...	சொற்பச்சேதம். சிலருக்குக் காயம்.
இரவில்.—லண்டன் (London)—(நடவடிக்கை பலமாக இல்லை). மர்ஸிஸயிட் (Merseyside), மிட்லாண்ட்ஸி (Midlands)-ல் ஒரு பட்டணம், தென் வேல்ஸ் (Wales)-ல் சில பாகங்கள், வடமேற்கு இங்கிலாந்து (England)	... 10 விமானங்கள்.	சில வீடுகள் இடிந்து போயின். அநேகமாய் ஒருவருக்கும் காயம் இல்லை. முக்கியமான சேதம் ஒன்றுமில்லை. 10 விமானங்கள்; 6 விமானிகள் உயிர் தப்பினர்.
காரிஸ்ஸா (Garissa), மாலின்டி Malindi). மால்டா (Malta).	2 விமானங்கள்.	நஷ்டமே இல்லை.

அனுபந்தம் I

யுத்தக் குறிப்புகள்.

எதிர்ப்பு.

இந்த விஷயத்தைப்பற்றி மறு முறையும் பிரஸ்தாபிப்பது பொருத்தமே. இதுவரை கடலில் பெரிய சண்டைகள் நடக்கவில்லை; அதற்குக் காரணம், எதிரி துறைமுகங்களில் பதுங்கிக் கிடப்பதுதான்; ஹிட்லரின் ஆதிக்கத்துக்குட்பட்ட தேசங்களைப் படையெடுக்கவில்லை. இப்படியிருந்தும், எதிர்ப்பு கிளம்பிவிட்டது என்பது உண்மை; அது ஜெர்மானியருக்குத்தெரியும்.

"ராயல் ஏர் போர்ஸ்"—பிரிடன் விமானப்படை—ஆழ்ந்த யோசனையின்பேரில் ஜாக்கிரதையுடன் செய்யப்பட்ட ஏற்பாட்டை அனுசரித்து, பொருளாதார வகையிலோ, போரிற்குறியதென்ற வகையிலோ, முக்கியமான குறிகளைத் தாக்குகிறது.

இது சாதாரண மனிதர்களுக்குத் தெரியாமலிருக்கலாம்; ஆனால் தாக்கப்பட்ட ஒவ்வொரு இடமும் முக்கியமான குறி.

யுத்த தளவாடங்கள் தயாரிக்கும் சாலைகளை எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு சாலையையும் தகர்க்க முடியாமலிருக்கலாம்; ஆனால் அவைகளுக்கு ஆதாரமான சாமான்களான கந்தகத் திராவகம் (Sulphuric acid) அக்கினித் திராவகம் (Nitric acid) என்ற திராவகங்கள் தயார் செய்யப்படும் சாலைகளை உடைக்கலாம். குண்டு, பீரங்கி செய்யப்படும் அல்லது சேமித்துவைக்கப்படும் ஒவ்வொரு சாலையும் உடைபடுவது சிரமமாகவிருக்கலாம்; ஆயினும், அவைகள் எங்கிருந்து வெளியேற்றப்படுகின்றனவோ அந்தஇடங்களில் குண்டுகள் போட்டுத் தகர்க்கலாம்; அவ்விதமே ஆதார யந்திரங்கள் தயாரிக்கப்படும் சாலைகளைத் தாக்கலாம்; இவ்விதமான காரியங்களெல்லாம் பிரிடன் விமானப்படை அத்தியாச்சரியமாக செய்கிறது.

பிரான்ஸ் வகையரா துறைமுகங்களின்பேரில் இடைவிடாமல் குண்டுகள் போட்டு தகர்க்கிறார்கள்; இது கேவலம் எதிரி புறப்படுவதை தடுப்பதற்காக மட்டுமல்ல. சேதம்செய்யப்பட்ட ஒவ்வொரு 500 டன் படகும், எதிரியின் பிரயாண வசதியை மிகவும் பாதிக்கிறது.

நடு நிலைமை வகிக்கும் தேசத்தார் சொல்லுகிறார்கள்: "ஜெர்மனியின் யுத்த பலம் இதற்குள்ளாகவே ஐந்தில் ஒரு பாகத்தின் அளவிற்கு அழிந்துபோய் விட்டது" என்று. இதெல்லாம் எதிர்ப்பு ஆகாது என்றால், எதுதான் எதிர்ப்பு ஆகும்?

அந்த ப்ரேன்னர் கணவாய் விருந்து.

ஒரு தினுக்கு. ஸ்காட்லாந்த் தேசத்தவர் ஒருவர் அதே தேசத்தைச்சேர்ந்த மற்றொரு பேர்வழியிடம் நேர்த்தியாகக் காணப்பட்ட ஒரு புகைச்சுருட்டைக் கொடுத்தார். அதற்கு இரண்டாவது பேர்வழி "என்ன கோளார் அந்தச் சுருட்டில்?" என்றார். அதைக்கேட்டு முதலாவது பேர்வழி ஆயாசப்படவில்லை.

இதைப்போலவே, ஹிட்லர் சம்பந்தப்பட்ட மட்டில், வெளித்தோற்றத்தைக் கொண்டு ஏமாறக்கூடாது. உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுவதில் புலி. ஆகையால் அந்த ப்ரென்னர் கணவாயில் ஹிட்லர் வெளியிட்டதாக சொல்லப் படும் பேச்சை நம்பக்கூடாது. இங்கிலாந்தை தான் எதிர்த்ததில் ஆங்கிலேயர் மசியாதபடியால், பால்கன் நாடுகளைத் தான் வியாபிக்கப்போவதாகவும், டார் டனெல்ஸ்ஸை எதிர்க்கப்போவதாகவும், மத்திய கீழ்பூமிகளிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களை அபகரிக்கப்போவதாகவும், ஸூயெஸில் (Suez) பெரிய யுத்தத் துறைமுகம் கட்டப்போவதாகவும், ஹிட்லர் சொன்னாராம். நாம் உடனே யோசிக்கவேண்டியதென்னவென்றால், ஹிட்லர் வேறு செய்யக்கூடியதென்ன வென்பது. மேலே சொன்ன விதமாக உளறிவிட்டு, ஜெனரல் ப்ரான்கோ (General Franco) அனுமதி பெற்றோ, பெறாமலோ, ஸ்பெயின் (Spain) தேசம் வழியாகப் படையெடுக்கலாம் என்று நாம் ஊகிக்கலாம். இந்தப் பேச்சும் (Berlin) பெர்லினிலிருந்து கசிந்து கசிந்து வந்ததாகப் பிரஸ்தாபப்படுவதால் நாம் அப்படி எண்ணுவது தவறல்ல.

இதிலிருந்து இரண்டு விஷயங்கள் ஊகிக்கக்கூடியதாக விருக்கின்றன. அந்த அனுமானம் சரி. அவையாவன :—

(1) ஹிட்லர் பிரிடனை (Britain) எதிர்த்து ஒன்றும் ஆகவில்லையென்ற காரணத்தால் பிரிடனின் சாம்ராஜ்ய நாடுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக எதிர்க்கத் தயாராகிறான் என்பது ஒன்று ;

(2) இந்த யுத்தத்தின் முக்கியமுனை மத்தியதரைக்கடல். அங்கே தான் முக்கியமான சண்டை நடைபெறும் என்பது ஒன்று.

அதனால் தான் ஜெர்மானியர் ருமேனியா (Rumania)-க்குள்ளும் பல்கேரியா (Bulgaria)-க்குள்ளும் வியாபிக்கிறார்கள்; அதனால்தான் அல்பேனியா-யூகோஸ் லாவ் (Albania-Yugoslav) எல்லைப் புறத்தில் பட்டாளங்களை சேகரிக்கிறார்கள்; இதன் நோக்கம் கிரீஸ் (Greece)-ஐயும் துருக்கி (Turkey)-ஐயும் பயமுறுத்தி ஜெர்மானியர் கட்சியை சேரும்படி அடித்தல்; ஸ்பெயின் (Spain) வழியே மேல் பாலைவனம் போய் எகிப்து (Egypt)-ஐ "எதிர்க்கும்" இத்தாலியருக்கு சகாயம் அனுப்ப முயற்சிசெய்வார்கள்.

நடக்கட்டும். இந்த "மத்தியதரைக் கடல் சண்டை" இந்த பெரும் போரில் முக்கியச் சண்டையாகவிருக்கப்போகிறதென்றால், இங்கிலாந்திற்கு பயமில்லை. யுத்த சாஸ்திர விஷயங்களை கவனிக்க இதில் சந்தேகமில்லை. கீழே கிடக்கிற எலும்புத் துண்டை யார் எடுத்துக்கொள்வது என்று சாதாரண நாய் ஒன்று வேட்டை நாயுடன் சண்டைபோடுவது போலல்ல. பிரிடனின் ஒப்பில்லாக் கப்பல் பட்டாளமென்ன, வட ஆபிரிக்கா (North Africa) நேசமான துருக்கி (Turkey) தேசம் இவைகளில் காபந்தான ஸ்தலங்கள், உலகளாவியதும் ராஜ விசுவாசம் நிரம்பியதுமான சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள கணக்கிடமுடியாத சொத்து சம்பத்து களென்ன, இவைகள் பலத்தால் பிரிடன் வெற்றியடையும் என்பது நிச்சயம். மத்தியதரைக் கடலென்ன, பிரிடிஷ் சாம்ராஜ்ய போக்கு வரத்து சாதனங்கள் என்ன, இவைகளெல்லாம் இங்கிலாந்தின் வசம் இருந்து வருகின்றன.

ஜப்பானின் வில்லங்கம்.

ஹிட்லர் உடன்படிக்கையால் ஜப்பானுக்கு லாபமில்லை, வம்புதான், என்று சென்ற வாரம் ஊகிக்கப்பட்டது. அந்த ஊகம் சரிதான் என்று அத்தாக்ஷி வெகு விரைவில் கிடைத்துவிட்டது.

(1) ஜப்பானியர் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தாரிடம் (U. S. A.) சமாதானமாக—கொஞ்சம் தலைவணங்கியே—நடக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு அமெரிக்க மாதுமியை ஒரு ஜப்பானிய போலீஸ்காரன் கைதி பண்ணினது "நியாயமற்ற காரியம்" என்று மூர்க்கமான ஜப்பானியர் ஒப்புக்கொள்ளுகிறார் என்றால், அர்த்தமென்னவென்று நீங்களே யோசியுங்கள்! மேலும், "அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் பேசி ஒழுங்குபண்ணவேண்டிய தேவையொன்றுமில்லை" யென்று செருக்குடன் சில நாட்களுக்கு முன்தான் ஜப்பானிய பர இலாகா அதிகாரிகள் பேசியிருக்க, இப்போது ஜப்பானிய பர இலாகா மந்திரி "மூவர் உடன்படிக்கையைப்பற்றி அமெரிக்கர் தப்பெண்ணம் கொண்டிருக்கிறார்கள், அது அவர்களுக்கு விரோதமானதல்ல, அவர்கள் சாதகார்த்தம் பேசப்பட்டது" என்று சமாதானம் கூறுகிறார்கள்!

(2) பிரிடனை பார்த்து ஜப்பானியர் கொஞ்சம் உருமுகிறார்கள், அதவும், இதென்னடா உபத்திரவம் என்ற ஸ்மரணையுடன் உருமுகிறார்கள். "பர்மா சாலை" திறக்கப்பட்ட விஷயமாக ஜப்பானியர் பேச்சு "மீசையில் மண் ஒட்டவில்லை" என்ற பாவனையாக பேசுகிறார்கள். ஏன்? பிரிடனுக்கு வலுவுக்கும் சிநேக தேசங்களுக்கும் குறைவில்லையென்ற உணர்ச்சிதான் காரணம்.

(3) மூவர் உடன்படிக்கையைப்பற்றி என்ன செய்வதென்று அவர்களுக்கே புலப்படவில்லை! பர இலாகா மந்திரி Mr. மட்சுகோ, அக்டோபர் 2-ம் தேதி சொன்னார் "உடன்படிக்கையால் ஐரோப்பிய யுத்தத்தில் சம்மந்தப்படுவோம் என்று அர்த்தமில்லை" என்றார். அக்டோபர் 12-ல் "யுத்தத்தில் ஜெர்மானியரும் இதாலியரும் அபஜயமடைவாரென்று தோன்றினால், ஜப்பானியர் அவர்களுக்கு உதவத் தயாராகவிருக்கவேணும்" என்றார். 4 வருஷம் ஏராளமான பணச் செலவு செய்து, சீனவுடன் சண்டைக்குப்போய் மாட்டிக்கொண்டு விழிக்கும் ஜப்பானியருக்கு இந்தப் பேச்சு காதில் நாராசம் பாய்ந்ததுபோலிருக்கும்.

(4) இந்த வாரம் முழுமையும், வந்த செய்தி சீன தளகர்த்தரான சியாங்-கி-செக்குக்கு ஜப்பானியர் விடுத்த சமாதான ஷரத்துக்களைப்பற்றிய செய்திகள். அந்த சீன தளகர்த்தர் யார்? "ஆசியாவில் புது முறையை சீனர் ஒப்புக்கொள்ளும் வரை விடமாட்டோம்" என்று எந்த சீன தேசத்தைப்பற்றி சபதம் கூறினார்களோ அந்த சீன தேசத்துத் தலைவர் அவர்.

இதெல்லாம் கவனிக்க, புராணத்தில் சொல்லப்பட்ட பெல்ஷாஜர்போல், தலையெழுத்தை முன்னமேயே சுவற்றில் எழுதப்பட்டு கண்ணிற்கு புலப்படுவது போலிருக்கிறது.

ஐக்கிய தேசத்தலைவர் தேர்ந்தெடுத்தல்.

ஜனநாயக ஆட்சி யென்ற யந்திரத்தில் மண்போய் புகுந்ததுபோல் இடையூறுக்கு ஆஸ்பதமாகவில்லாமற்போனால், அமெரிக்காவில் சமீபிக்கிற தேருதல் ஹாஸ்யகரமாகவிருக்கும். Mr ரூஸ்வெல்ட்டை (Mr Roosevelt) ஹிட்லர் தனது முக்கிய விரோதிகளில் ஒருவனுகக் கருதுகிறுன். ஆகையால் அவர் கட்சி தோல்வி யடைய வேலைசெய்ய ஐந்தாம்படையைக் கிளப்பிவிட்டிருக்கிறுன். இருந்தபோதி லும் பாருங்கள், ரூஸ்வெல்டை தேர்தலில் எதிர்க்கும் வெண்டெல் வில்கி (Wendell Wilkie) என்பவர், பிரிடனுக்கு சகாயம் செய்வதில் முயற்சி குறைவும் தாமதமும் ஏற்பட்டிருக்கிறது என்று ரூஸ்வெல்ட் பேரில் குற்றஞ்சாட்டுகிருர்! யார் நாலு வருஷகாலத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அமெரிக்க ஜனங்களின் மனேபாவம் எப்படி யிருக்கிறதென்பதற்கு சில அறிகுறிகள் காணப்படுகின்றன. வெண்டல் வில்கி ரூஸ்வெல்டைத் தோற்கடிப்பாரென்று தோன்றவில்லை. ஒருவாறு தோற்கடித்தாரென்று வைத்துக்கொள்ளுவோம்; அடியிற்கண்ட விஷயங்களை அவர் மாற்றுவாரா அல்லது பிரயோஜனமற்றதாகச் செய்வாரா?

(1) ராணுவப்படையில் சேராத ஆங்கிலேயர்கள் இப்போது தனிமையில் விமானம் ஓட்ட ஐக்கிய தேச விமானப்படை போதனுசாலைகளில் கற்றுக்கொள்ளுகிருர்கள்.

(2) ஸ்வீடனுக்காக தயார்செய்யப்பட்ட கீழேபாய்ந்து குண்டுகள்போடும் விமானங்களில் 100, பிரிடனுக்குக்கொடுப்பதாக பேச்சு. (இப்பால் கொடுத்தாகியும் விட்டது!).

(3) கப்பற்படை தலைவர், அட்மிரல் ரிச்சர்ட்ஸன் (Admiral Richardson) தனது கப்பல்களுக்கு ஆள் தேவையென்று ஆயிரக்கணக்கான ஆட்களை ஹவாய் (Hawaii) தீவுக்குக்கொண்டுபோவதாக வெளியிட்டிருக்கிருர்.

(4) அலாஸ்காவில் கப்பற்படை துறைமுகங்கள் பலப்படுத்தப்பட்டு இருக்கின்றன. நவம்பர் மாதம் 7-ம் தேதி கப்பற்படை கையிருப்பு ரெஜிமெண்ட் மூன்று யுத்த சன்னத்தமாகப் போகிருர்கள். யுத்த விமான தயாரிப்பு தீவிரமாக நடக்கிறது. நாள் முழுவதும் வேலைசெய்து வருகிருர்கள்.

(5) ஆசியாபுரத்து கப்பற்படைக்கு பதிலி உத்தியோகஸ்தர்கள், மனைவிகளை அழைத்துப்போகாமல், தங்கள் கப்பல்களில் போய்சேறுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிருர்கள். சீயம் தேசத்திற்கு அனுப்பப்பட்ட 10 குண்டு போடும் விமானங்கள் மானில்லா (Manilla) என்ற அமெரிக்காவுக்கு சொந்தமான தீவில் இறக்கப்பட்டன.

(6) அக்டோபர் 8-ம் தேதி பதிப்பில், "மியாமி ஹெரால்ட்" (Miami Herald) என்ற பத்திரிக்கை பின் வருமாறு அப்பட்டையாகப் பிரசுரித்திருக்கிருர்கள். "ஜப்பான் நாலு வருஷம் யுத்தம் செய்தும் சீனவை தோற்கடிக்கமுடியாத

நிலைமையில் அமெரிக்காவின் அளவுகிடந்த பலமும் முஸ்தீபுகளும் ஒரு பக்கம் மும்முரமாய் இருக்கின்றன."

(7) அக்டோபர் 6-ம் தேதி பதிப்பில், "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகையில் பதிப்பு:

(i) "குண்டு—திருஷ்டி" என்ற ரகசியம் உள்பட, அதிகாரிகளுக்குத் தெரிந்த எல்லா ரகசியங்களையும் சொல்லி பிரத்யக்ஷமாக பிரிடனுக்கு சகாயம் செய்யவேணுமென்றும் (இது செய்தாய்விட்டது).

(ii) கிழண்டை பிரதேச சம்மந்தமாக இருவரும் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி ஆங்கில—அமெரிக்க உடன்படிக்கை.

(iii) அமெரிக்கர் நடு நிலைமை சம்பந்தமாகவும், கடன் கொடுத்துதவும் சம்பந்தமாகவும் இருக்கும் சட்டங்களின் கடுமையைக் குறைத்தல் (இது அநேகமாய் முடிந்துவிட்டது) முதலிய விஷயங்கள் நடைபெறவேண்டுமென்று அதிகார வர்க்கத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஒரு மாகாணமும் ஒரு ஸமஸ்தானமும்.

மாகாணமென்பது சென்னை ராஜதானி; ஸமஸ்தானமென்பது நாம். நமது தாராளத்தையும் ராஜவிசுவாசத்தையும் நினைத்து நாம் பெருமையடையலாம். சென்னை கவர்னர் பிரபுவின் யுத்த நிதி அரைக்கோடிக்குமேல் போய்விட்டது; பொங்கல் வருமுன் இன்னமொரு அரைக்கோடி சேர்க்க நோக்கமும் இருக்கிறது!

இங்கே, புதுக்கோட்டையில், வைஸிராய் அவர்களுக்கு ஏற்கனவே ஒரு லக்ஷ ரூபாய் அனுப்பிவிட்டோம்; ஏறக்குறைய இன்னுமொரு அரை லக்ஷம் சீக்கிரம் அனுப்பத் தயாரிலிருக்கிறது. சென்ற வாரந்தான் நகரத்தார்கள் 77,000 ரூபாய்க்கு ஒரு செக் (Cheque) நமது H. H. the Raja அவர்களிடம் சமர்ப்பித்தார்கள். அதைக்கொண்டு பீவர்ப்ரூக் பிரபுவால் (Lord Beaverbrook) ஒரு யுத்த விமானம் வாங்கப்படும்.

இரண்டரை லக்ஷமென்பது, ஐம்பது லக்ஷத்தில் 20-ல் ஒரு அம்சம். நமது ஸமஸ்தானத்தின் ஜனத்தொகை சென்னை ராஜதானியின் ஜனத்தொகையில் 120-ல் ஒரு அம்சம். நமது கொடையால் புதுக்கோட்டைக்கு பெருமை! இந்த ஊக்கத்தை கைவிடாமல் காப்போமாக!

அனுபந்தம் II.

பிரிடன் பேசுகிறது.

(ஜே. பீ. பிரீஸ்ட்லி ஒலிபரப்பியது).

வந்தனம்.

நேற்று மாலை விமான நிலயத்திற்கு வந்து சேர்ந்தேன். அந்த நிலயத்தைச் சற்று தூரத்திலிருந்து கண்டு பிடிக்கவோ, பார்க்கவோ கூடவில்லை. ஆயினும் பூராவாகப்பார்த்தால் அது ஒரு சிறிய பட்டணம்போலிருக்கிறது. இந்தப் பூதாகாரமான வெடி விமானங்களின் (bombers) தேவைகளுக்கு ஸர்பரா செய்ய ஆஸாமிகளின் பட்டாளம் வேண்டியிருக்கிறது. விமானப் படையென்றால் விமானிகளையும், துப்பாக்கிதார்களையும் நினைக்கிறோம். அவர்களைத்தவிர, கணக்கற்ற ஸூக்ஷ்ம ஞானிகளும், நிலயக்காரர்களும், ஸங்கேதக்காரர்களும் (Signallers) இருக்கிறார்கள். ஆகையால், இவ்வளவு பெரிய ஏற்பாடு.

நான்போய்ச் சேர்ந்தபொழுது தான் "திட்டமிடுதல்" (Briefing) என்ற வேலையானது முடிந்துகொண்டிருந்தது. "திட்டமிடுதல்" என்பதின் அர்த்தம் என்னவென்றால், பெரிய உத்தியோகஸ்தர்கள், உளவு உத்தியோகஸ்தர்கள், விமானங்களில் செல்லும் ஆஸாமிகள் எல்லோரும்கூடி, அங்கு பெரிதாக்கிக் காட்டப்பட்டிருக்கும் புகைப்படங்களிலிருந்து குறிகளைப் பொறுக்கி, அன்று இரவு படையெடுக்க வேண்டிய எல்லாத் தகவல்களும் குறிப்பிட்டு. விமான அணிக்கு ஆக்ஞைகள்மூலம் கொடுக்கப்படும். பிரிடிஷ் விமானப்படை எப்பொழுதும் குறி தவறாமல் வெடி போடவேண்டுமென்றும், அக்குறிகள் ராணுவ சம்பந்தமாக இருக்கவேண்டுமென்றும் வர்ஜாவர்ஜமின்றி, ஜெர்மானியர் சந்தோஷத்துடன் வெடிபோடும் வழக்கத்தைத் தாங்கள் அறவே தள்ளவேண்டும் என்றும் நிருதியாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நம் ஆட்கள் எந்தக் குறியைத் தாக்கவேண்டும் என்று வெகு குறிப்பாகக் காட்டப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். அந்தத் திட்டமிடும் கூட்டங்களில், அவரவர்களின் பாதைகளும் நிச்சயம் செய்யப்படுகின்றன. அங்கு கிடக்கும் தேச படங்கள் நம் மனதைக் கலங்கச்செய்யும் வகைகளாகயிருக்கும்.

நான் அங்கு சில விமானிகளோடு பரிச்சயம் செய்விக்கப்பட்டேன். அவர்களில் சிலர் பெரிய உத்தியோகஸ்தர்கள். சிலர் சார்ஜண்டுகள். ஒருவர் அணித்தலைவர். அவர்கள் அன்று இரவு படையெடுத்துச் செல்பவர்கள். அன்று புறப்படப்போகும் படையெடுப்பின் விவரங்கள் ஒன்றையும் விடாமல் கவனிப்பதற்காக, சீக்கிரமாக மாலை உண்டியை முடித்துக்கொண்டேன். அங்கு யாராவது சிரமம், அவசரம், படபடப்புக் காட்டவேணுமே; கிடையாது. எல்லாம் அமைதியாகவும், சீராகவும்

இருந்தது. ஒரு பெரிய யந்திரம் மிருதுவாக வேலை செய்வதுபோலிருந்தது. அது என் மனதைக் கவர்ந்தது. அப்பொழுதுதான் நாஸிகளுடைய முக்கியமான போக்குவரத்துகளையும், யுத்தத் தொழில்களையும் எவ்வாறு இரவில் பிரிடிஷ் விமானப்படை நாசம் செய்கிறது என்று அறிந்தேன்.

அணித்தலைவருடன் சென்றேன். முன் அவர் பெரியபோர்புரியும் விமானியாக இருந்தவர். பராக்கிரமங்களுக்காக மூன்று தனித்தனி பதக்க வரிசைகளால் அலங்கரிக்கப்பெற்றவர். அவருடன் சென்று, வெகு தூரம் பறப்பதற்காகத் தயாரிக்கப்படும் விமானங்களைப் பார்வையிட்டேன். ஒரு விமானத்தின் அடியிலிருந்த ஒரு கதவைத் திறந்து பார்க்கவேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். அங்கு தட்டுகளில் வைத்திருந்த வெடிகளைக் காண்பித்தார். அந்தப் பெரிய வெடிகளுக்கருகே சில அங்குலங்கள்தானிருக்கும் என் தலை. அப்படி என் தலையை அவர் பிடித்துக்கொண்டு, அவைகளை வெடிக்கச்செய்யும் உள் மர்மங்களை எடுத்து விவரித்தார். "என்ன? சொன்னது புரிந்ததா?" என்று கேட்டார். "ஆமா, ஆமா, ஆமா, புரிந்தது" என்று வெகு வேகமாக பதில் சொன்னேன். ஆனல் எனக்கொன்றும் புரியவில்லை. எவ்வளவு சீக்கிரத்தில் எவ்வளவு தூரம் அந்த இடத்தைவிட்டு நகரலாம் என்ற ஒரு எண்ணம்தான் எனக்கிருந்தது.

விமானங்கள் கிளம்பும் சமயம் வந்தது. அந்த விஸ்தாரமான விமான வெளியையும், ஓடு பாதையையும் பார்க்கக்கூடிய உயர்ந்த கோபுரத்தின் மேல் ஏறினேம். அன்று மாலை நான் கண்ட ஸூரியாஸ்தமனம் இங்கிலாந்தில் இதுவரை நான் கண்டிராத விசேஷமான அஸ்தமனம் என்று நான் உண்மையில் நினைக்கிறேன். அது ஒரு அசல் பாலைவன அஸ்தமனம். அது எகிப்து தேசத்தையும், எரிஜோனு பிரதேசத்தையும் ஞாபகமூட்டியது. செங்காந்திகொண்ட ஆகாயத்தில் கருமேகங்களின் கரைகளும், கீழ் வானத்தில் லேசான சிகப்புக்கொண்ட பின் காந்தியும் அவ்வாறு ஞாபகமூட்டியது. மாலைக் காந்தியும் மங்கத்தொடங்கிற்று. ஸங்கேத வெளிச்சங்களும் மின்ன ஆரம்பித்தன. பருத்த விமான யந்திரங்கள் அலறின. ஒரு விமானத்தின் பின் மற்ருெரு விமானமாக அலறிக்கொண்டு மைதானத்தில் ஓடிக்கிளம்பிற்று.

அந்த விஸ்தாரமான விமான மைதானத்தில் அந்த விமானங்களும் ஒத்தை பச்சைக் கண்ணுடைய விசித்திரப் பூச்சிகளைப்போலத் தோன்றின. அச்சமயம் தூதுகொண்டு ஒரு மோட்டார் அவைகளில் ஒன்றினருகே வந்த சமயம்தான் விமானத்தின் பருமன் விளங்கிற்று. அந்த விமானத்தினருகே நின்ற மோட்டாரும், குழந்தைகளின் பொம்மை மோட்டார்போல் தோன்றிற்று. இப்படியாக அவ்விமானங்கள் வெகு ஜாக்கிரதையாக நிருதிசெய்யப்பட்ட குறிகளை அழிக்கவல்ல கருவிகளை வயிற்றில் சேகரித்துக்கொண்டு, சீரான கர்ஜனையுடன் கிளம்பி ஜாஸ்தியாகிவரும் இருட்டிற்குள் சென்றன. அவைகளின் குறி என்னவென்று நான் சொல்லமுடியாது; ஆனல் கடல் தாண்டி நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் குறிப்பிடப்பட்ட ஒரு

லக்ஷியம் என்பது நிச்சயம். அந்த லக்ஷிய வஸ்துவுக்கு தனக்கு என்ன கதி வரப்போகிறதென்று தெரியாது. ஆயினும் அதுவும், அதற்கருகாண்மை யும் புகைப்படமெடுக்கப்பட்டு நன்றாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆங்கிலச் சந்திவேளையில் அனுப் பப்பட்ட விமானக்கூட்டமும், நெருப் பும் நாசமுங்கொண்டு ஐரோப்பா பாதி பாகத்தைத் தாக்கச்சென்றது.

இப்பொழுது கணப்பிற்கும் உண் டிச்சாலையின் ஸந்தோஷ சப்தங்களுக் கும் திரும்பிவந்தோம். அங்கு நான்கு பெரிய உத்தியோகஸ்தர்கள் ஒரு மேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு ஒரு புதிர் பிரித்துக்கொண்டி ருந்தார்கள். அப்பொழுது இளைப்பா றிக்கொண்டிருந்த சிலர் வம்பு பேசிக் கொண்டும், வாசித்துக்கொண்டுமிருந் தார்கள். வெகு தூரமான லக்ஷியங் களை நோக்கித் தாக்குவதற்கு நம் விமானங்கள் சென்றிருக்கும் அளவில் நாம் அமைதியாக இருக்கும் காலமல்ல வென்று நினைத்தேன். தகவல்கள் அறியும் உத்தியோகஸ்தர்களுடன் சிறிது பேசினேன். தகவலறிவு என் பது உண்மையான தகவல்களறிவதே. முதலில் குறிகளைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். பிரிடிஷ் விமானப் படை வெகு தந்திரமாயும், மெச்சத் தக்கப் பண்புடனும், பிரதி ராத்திரியும் சரியான குறிகளைப்பொறுக்கி எடுத் துக்கொண்டுதானிருக்கிறார்கள். அக் குறிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத் தைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண் டும். ஆகையால், குறிதவறு குண்டு வீச்சுக்கு இந்தத் தகவலறியும் இலாகா வும், ஒவ்வொரு விமானியென்ன, அவர் களின் அணி என்ன, அவைகள் எல்லாம் அவைகள் மூலமாய் மேல் இலாகாவுக்குத் தகவல் அனுப்பிவருவ தற்குவேண்டிய வெகு உயரிய ஸாதன மாக அமைக்கப்பட்டிருக்கிறது. வெளி யில் சென்றிருக்கும் யந்திரங்கள், குண்டுவீசும் வேலையை முடித்துக் கொண்டு திரும்பிவரும்வரை நான் கொஞ்சம் முயற்சித்தாவது தூங்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆகையால் காலியாகயிருந்த ஒரு படுக் கையறைக்குள் சென்று சற்று கண்ணை மூடினேன். பிறகு திரும்பிவந்தவர் களின் அற்புதமான நாடகம்போன்ற செயல்களைக்கேட்கத் தயாராக விழித் துக்கொண்டேன். ஆகாயத்தில் சில நக்ஷத்திரங்கள் குளிர்ந்து சிலிர்த்துக் கொண்டிருந்தன. இன்னும் இரவு இருண்டுதான் இருந்தது. கொஞ்சம் நடுங்கிக்கொண்டே கார்ய அறைக்குச் சென்றேன். மனோகரமான சூடான தேத்தண்ணீர் கொஞ்சம் மற்ற உத்தி யோகஸ்தர்களுடன் அருந்தினேன். அந்த உத்தியோகஸ்தர்கள், தத்தம் வேலையிலமர்ந்து விமானங்கள் திரும்பி வந்துகொண்டிருக்கும் தகவல்கள்படி படத்தில் குறித்துக்கொண்டுவருவதை உற்று நோக்கினேன். அதுவரை எல்லாம் க்ஷேமம் என்றும், அவர்கள் வரும் வழியை விவரித்தும், ரகஸ்ய சங்கேதச் செய்திகள் இரவு முழுவதும் வந்துகொண்டிருந்தன. உள்நாட்டில் வெகு தூரத்திலும், அருகிலும் வந்து தாக்கும், சத்துரு விமானங்களைப் பற்றிய இதர செய்திகளும் வந்து கொண்டிருந்தன.

இரவு, வெளியில் காலியாகவும் இருண்டிருந்தபோதிலும் அச்சமயம் ஆகாய மார்க்கம் நடந்த கார்யங்களால் வெகு கலகலப்பாகத் தோன்றிற்று.

அந்தரிக்ஷமும் ஸங்கேதத்தூதுகள் நிரம்பி மோதிக்கொண்டிருந்தது. இதற்குள் விமானங்களும் தத்தம் குறிகளை அடைந்துவிட்டனவென்றும், அவைகள் திரும்பிவரவில்லையென்றும், அவர்களிருக்கும் இடகுறிகளைப்பற்றி அவைகளிடமிருந்து தகவல் வராததால், அவைகள் தாத்காலிகமாக மறைந்துபோயினவோ என்றும் தோன்றிற்று.

சற்று நேரத்திற்குமுன் நான் சந்தித்திருந்த ஒரு தகவல் அறியும் உத்தியோகஸ்தரும் முகத்தில் தூக்கத்தின் சின்னங்கூடயில்லாமல் உள்ளே வந்தார். திரும்பிவரும் விமானிகளை கேள்விகள் கேட்கும் பெரியவேலைக்காக மேஜைகளையும் காகிதங்களையும் தயார் செய்தார். திரும்பி வந்துகொண்டிருக்கும் யந்திரங்களைப்பற்றிய செய்தியை அறிவித்து டெலிபோன் மணியடித்துக்கொண்டிருந்தது. ஒன்று இரண்டு விமானங்கள் ஸமீபித்துக்கொண்டிருந்தன. கடைசியாக ஒரு ரீங்காரம் கேட்டது. முதன்முதலாக வந்த விமானம் விமான மைதானத்தைச்சுற்றி வளைந்துவருகிறதென்று தெரிந்துகொண்டோம். ஒன்று இரண்டு விமானங்களுடன் தந்தியில்லா டெலிபோன் மூலம் ஸம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. தந்தியில்லா விசையோட்டுவோனின் அருகே நின்றால் ஆகாயத்திலிருந்து பல குரல்கள் கேட்டன. கொஞ்சம் மனதிற்கு பயமளிக்கக்கூடியதாகயிருந்தன. ராணுவ நாணய மாற்று சாலையோவென்று நினைக்கும்படியாக கரும்பலகைகளில் எண்ணிக்கைகளை எழுதிக்கொண்டிருந்தார்கள். உயரத்தில் ரீங்காரம் கேட்டுக்கொண்டிருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் டெலிபோன் அடித்துக்கொண்டிருந்தது. குழாய்களும் சிகரட்டுகளும் பற்றவைத்துக்கொண்டிருந்தார்கள். ஆவி பறக்கும் தேத்தண்ணீரும் காபியும் மேலும் மேலும் பரிசாரகர்களால் வழங்கப்பட்டது. தகவலறியும் உத்தியோகஸ்தர்களும் சாய்வுமேஜைக்குப் பின்னால் பென்சிலைத் தீட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கண்களிலிருந்த ஒளியிலிருந்து, அவர்கள் மூளைகளையும் தீட்டிக்கொண்டிருந்தார்கள் என்பது திண்ணம். இப்பொழுதிலிருந்து இன்னும் மேலும் அவர்களுடைய வேலை மறுபடி ஆரம்பித்தது.

விமானிகள் இறங்கி வந்தவுடன் தகவலறியும் உத்தியோகஸ்தர்களால் கேட்கப்படும் பல கேள்விகளுக்கு ஜாக்கிரதையாக அவர்கள் பதிலளிக்க வேண்டும். வழியில் என்ன நடந்ததென்றும், குறிகள் எவ்வாறு தென்பட்டதென்றும், அவை பேரில் எவ்வாறு வெடி வீசப்பட்டதென்றும், அதன்மேல் என்ன நடந்ததென்றும், எதிர்ப்பு எவ்விதமிருந்ததென்றும், எதிர்ப்பின் அளவு எவ்வளவென்றும்,—அது பெரும்பாலும் விமானவீழ்ச்சி பீரங்கிகள் தான்— இன்னும் என்ன என்ன விஷயங்களைப்பற்றி விமானிகள் விவரிக்க விரும்புகிறார்களோ அவைகளையும் அந்த உத்தியோகஸ்தர்கள் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும்.

மெத்தைபோல் அடைக்கப்பட்ட தோல்சட்டை தரித்துக்கொண்டிருந்த அணித்தலைவன் இப்பொழுது எங்களிடம் வந்துவிட்டார். அவர் ஒரு பருத்த தேகத்தையுடையவர். அவர் ஒவ்வொன்றையும் கவனித்து வந்தார். அவருடைய ஆஸாமிகள் வருவதை ஒரு

மூத்த ஸகோதரர்போல் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். கடைசியாக ஒரு விமானி திரும்பிவந்தார். கொஞ்சம் விழித்துவிழித்துப் பார்த்துக்கொண்டு, கொஞ்சம் குலுக்கப்பட்டவராகத் தோன்றினரே ஒழிய இளைத்தவராகவோ, களைத்தவராகவோ, கவலையுற்றவராகவோ தோன்றவில்லை. கேள்விகள் ஆரம்பமாயிற்று. முதலில் அவை மனதைக் கவரக்கூடியதாயிருந்தன. ஏனெனில், எத்தனையோ நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் இருளில் நடந்த சம்பவங்களைக் கோர்த்து ஒரு சித்திரத்தை ஒருவர் வரைந்துகொள்ளக் கூடியதாகவிருந்தது. வேலையில்லாமல் சாதாரணமாய் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு, ஒரு நுட்பமான சங்கதியைக்கூட விடாது சேகரிக்க அங்கு திருப்பித்திருப்பி கேட்கும் கேள்விகளும் பதில்களும், முடிவில்லாமல் குறித்துக்கொள்வதும், வெகு ஸ்வாரஸ்யமற்றதாகயிருக்கும். ஆனால் டெலிபோன் கேட்பவரிடம் உட்கார்ந்து அவர் செய்யும் வேலைகளை கவனிப்பதும், வந்துசேர்ந்ததாக அர்ஜிசெய்து கொள்ளாத விமானங்களைக் கூப்பிடுவதும், எதிரி விமானங்களின் சலனங்களைக்குறிப்பதும் வெகு ஸ்வாரஸ்யமாகவிருந்தது. அல்லது ஸங்கேத அறைக்குள் சென்று உயரே பறக்கும் யந்திரங்களிலுள்ளவர்களுடைய குரல்களைக்கேட்பதும் வெகு உத்ஸாகமாக இருந்தது.

பிறகு விமானிகளுக்குமேல் விமானிகளாக வந்தார்கள். கேள்விகளுக்கு மேல் கேள்விகளாக பதிலளித்தார்கள், பிறகு லேசாக சிகரட்டுகள், கோப்பைகளில் காபி. அணித்தலைவன் அங்கு மிங்கும் போய்க்கொண்டும், அங்கு ஒரு விமானத்திலிருந்து வெளியேறிய இளைய விமானியை முறுவலுடன் வரவேற்றுக்கொண்டும், இங்கு மற்றொருவரை திடீரென்று ஒரு கேள்விகேட்டுக் கொண்டும் இருந்தார். இதற்குள் வெகு தூரத்திலுள்ள குறிகளுக்கு என்ன ஏற்பட்டதென்று எங்களுக்கு சுமாரான அளவுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது. ராணுவ லக்ஷியங்கள் அடிக்கப்பட்டன, தீ மூட்டப்பட்டன, வெகு சேதம் ஏற்படுத்தப்பட்டது என்றும், அந்த பயங்கரமான பிரிடிஷ் விமானப்படை தாக்கிற்று என்றும் கண்டோம்.

வெளியே உதய காலத்தில், குளிர்ந்த சின்னங்கள் தென்பட்டன. இப்பொழுது கொட்டாவி விடாமலும் களைத்ததாகக் காண்பிக்காமலுமிருக்க முடியவில்லை. "குளித்துச் சிற்றுண்டி செய்தல் நலம்" என்று அணித்தலைவர் வெகு அர்த்த புஷ்டியோடு சொன்னர். இரவு வெடிவீசும் விமான நிலயத்தில் சிற்றுண்டி சாதாரண சாப்பாடு அல்ல. அதுதான் அன்றைக்கு பெரிய சாப்பாடு. வேலையெல்லாம் செய்துவிட்டு சாப்பிடும் சாப்பாடு அது தான். போஜன சாலைக்கு நாங்கள் எல்லோரும் சென்றோம். அங்கு நீண்ட மேஜையில் பலவிதமான ஆகாரங்களை உண்டு கொண்டு பல இளைஞர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். அவர்கள்தான் சற்று முன் சத்துரு தேசங்களுக்கு வெகு தூரம் பறந்து சென்று திரும்பி வந்தவர்கள். சற்று முன்தான் அவர்களுடைய ராக்கப்பல்கள் ஆயிரக்கணக்கான வெடி வீச்சுகளின் ஒளியால் பிரகாசித்துக் கொண்டும், ஒலியால் அதிர்ந்து அசைந்துகொண்டும் பறந்து கொண்டிருந்தவை. முன்புராணங்களில்

வந்த ருத்திராகாரமான போர் வீரர்களைப்போல் அவர்கள் தோற்ற வில்லை. பள்ளிக்கூடத்தில் வேலை நாட்கள் முடியும் ஸமயத்தில் தலைமை உபாத்தியாயரைக்கண்டு பேசிவிட்டு வந்த பள்ளிப்பிள்ளைகளைப் போல் தோன்றினார்களே ஒழிய வேறல்ல. அப்படி நான் சொல்லுவதால் ஏதோ வெட்கத்தால் சிவந்து கொண்டிருக்கும் மீசை முளைக்காத பையன்கள் என்ற அர்த்தம் கொள்ளக்கூடாது. அவர்களில் பலர் ஆச்சரியப்படத்தக்க வளர்சியை அடைந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரிடமும் ஒரு உல்லாஸமும், குதூகலமும் குடிகொண்டிருந்தது.

அவர்களுடைய படை அவ்வளவு உக்கிரமான சக்தியுடனும் தவருக்குறியுடனும் அடித்து அழிப்பது அவர்களுக்கு யாதொரு ஆச்சரியத்தையும் தரவில்லை. ஏனெனில் நம்முடைய படைகளில் முன்னேறித்தாக்கும் புஜமான விமானப்படையின் விமரிசையும், பலமும், ஜயமும் அவர்களுக்கு ஸர்வ ஸாதாரணமாகத் தோற்றியது. அவர்கள் காலாக்கினி ஜ்வாலைகளின் ஊடே அப்பெரிய யந்திரங்களில் பறந்து செல்வதும், அல்லது கடலில் விழுந்து விட்டால் அவர்களுடைய சிறிய ரப்பர் படகுகளில் மிதப்பதும் அவர்களுக்கு ஒரு அபாயகரமான செயலாகத் தோன்றவில்லை. ஆனால் பிரிடிஷ் படையென்ற பெரிய யுத்த யந்திரமானது, அதன் உயர்ந்த தகவலறி ஏற்பாட்டின் மூலம் தகவல்கள் தெரிந்து கொண்டு, நாஸி யுத்த தந்திரமானது தகர்த்து உடைந்து நொருங்கும் வரை பிரதி இரவும் தாக்கிக் கொண்டு இருக்கிறதென்றும், அப்பெரிய யந்திரத்தின் ஈட்டி முனையாய் நிற்பவர்கள் தாங்களே யென்றும் அவர்களுக்கும் தெரியும். நாமும் அறிந்ததே.

மற்றொரு விஷயம் அங்கு தெரிந்துகொண்டேன். வெகு கோலாகலமான பராக்கிரமங்கள் போலும், வெகு விசேஷ சங்கதிகள் போலும் பொது ஜனங்களுக்குத் தோன்றும் விமானப்படை தாக்குதல்கள் அவர்களுக்கு வெகுசுலபமானதாகத் தோன்றிற்று. ஆனால், லக்ஷியங்களைத் •தேடுவதும் தொழிற்சாலைகளைக் கண்டு பிடித்து சரியாக குறிவைத்து அடிப்பதும் பொது மக்களுக்கு ஸ்வாரஸ்யமற்றதாயினும், அவர்களுக்கு உண்மையான வேலையாகத் தோன்றியது. ஒவ்வொருவராக எழுந்திருந்து, அது விடியற்காலமாயினும், "நல்விரவாகுக" என்ற வழக்கமான ஆசிகள் கூறி, உறங்கச் சென்றனர். அவர்களுடைய படைப் பதியும் என்னைக் கைக்குலுக்கிவிட்டு அவருடைய உத்தியோக அறைக்குச் சென்றார். ஏனெனில் ஒரு நாளைக்கு 22-மணி நேரம் வேலை செய்யும் பெரிய வெடி விமான நிலயத்தை நடத்தும் வேலை அவருடையது. ஆனால் அது எப்பேர்ப்பட்ட வேலை! எல்லோருக்கும் வந்தனம்.

அனுபந்தம் III-A.

பிரெஞ்சுக்காரர்களை வெல்ல ஜெர்மானியர்கள்செய்த தந்திரங்கள்.

ஐரோப்பாவை வெல்ல ஹிட்லர் ஐந்து உபாயங்களை உபயோகிக்கிறார்—1. மிருகபலம்; 2. வச்யம்; 3. லஞ்சம்; 4. பொய்ப்பிரசாரம்; 5. டம்பப்பேச்சு.

(இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியாவிலிருந்து பத்திராதிபரின் அனுமதியின் பேரில் மொழி பெயர்க்கப்பட்டது.)

முறைப்படி, சாஸ்திரப்படி, ஜெர்மானியர் ஸர்க்கஸ் மிருகங்களைப்போல் மிருகத்தன்மையில் பழக்கப்படுகிறார்கள். இதற்காக சிலம்பக்கூடங்கள், வாலிப இயக்கங்கள், திறந்தவெளி—முகாங்கள், சிந்துப்பாட்டுகள், வளந்தான், கும்மிகளெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹிட்லர் காலத்திற்கு முன்னேயே இவைகள் ஆரம்பமாய்விட்டன.

பிற ஆசிரியர்களுடைய கிரந்தங்களிலிருந்து சோரம் செய்து, பிறர் கருத்துக்களைத் தனதாக்கிக்கொண்டு, சிறிதைப் பெரிதாக்கிச் சொல்லுவதில் ஹிட்லர் ஸமர்த்தர். இம்மாதிரி கற்பனைகளைச் சேர்த்து, புது தேச திட்டங்கள் அமைத்து 'மைன் காம்ப்' என்னும் புஸ்தகத்தைப் பதிப்பித்தார். இந்தப் பேத்தலை ஒருவரும் மதிக்கவில்லை. ஜெர்மனியில் பெரியோர்கள் இதில் சொல்லியிருப்பது அசாத்யமென்று தள்ளிவிட்டார்கள். ஆனால், வாலிபர்கள் ஏமாந்து ஹிட்லர் வலையில் சிக்கிக்கொண்டார்கள்.

மேற்சொன்ன ஐந்து உபாயங்களையும், இந்த வாலிபர்களைக்கொண்டு ஹிட்லர் நடத்திவருகிறார்.

முதலாவது உபாயத்தின் முக்கிய அம்சம் பலாத்காரமும், மிருகத்தன்மையும். ஸர்க்கஸ் விளையாட்டில் சாட்டையைச் சுண்டினவுடன் மிருகங்கள் உருமுவது, கடிப்பதுபோல் வாலிபர்கள் அடித்துப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு அதோ கதி; மானத்தைவிட்டுக் கீழ்ப்படிந்தவர்களுக்குத் தலைமைப் பதவிகள். இவர்களுக்குப் பயந்து பொது ஜனங்களும் பவ்யப்பட்டார்கள்.

இந்த மனித மிருகங்கள் யூதர்கள்மேல் ஏவப்பட்டு, அவர்களைப் படாதபாடு படுத்தினார்கள். இதிலிருந்து இம்சை முறைகளில் நல்ல பழக்கமேற்பட்டது. இதில் தேர்ச்சியடையாதவர்கள் தள்ளப்பட்டார்கள்.

இதர தேசங்களுக்குள் புகுந்து ஜனங்களைக் கலைப்பது இரண்டாவது உபாய மாகும். இதற்காக அழகான பெண்களை அனுப்பி, அரசர்கள், ஸர்வாதிகாரிகள் முதற்கொண்டு, ராணுவ நிபுணர்கள், அதிகாரிகள் உள்பட அனைவரும், மோக வலையில் சிக்கி, கலைக்கப்பட்டார்கள்.

பொன்னாசை கொண்டவர்கள் லஞ்சம் கொடுக்கப்பட்டார்கள். இது மூன்றும் வகைத் தந்திரமாகும். இது சுலபவழி.

ஹிட்லரின் ஐந்தாம்படைத் தந்திரங்களில் தாக்ஷண்யமோ, சந்தேகமோ கிடையாது. எவன் ஒருவன் வலைக்குள் சிக்கவேண்டுமோ அவன் விஷயத்தில் மேற்சொன்ன தந்திரங்களை ஒவ்வொன்றாய்ச் செய்துபார்ப்பார்கள். சிக்கிக் கொள்ளாவிட்டால், கொன்றுவிடுவார்கள்.

பிரசாரமானது நான்காம் முறையாகும். ஜெர்மானியர்கள் மனதை மாற்ற, தினசரி பின்வருமாறு உபதேசம் செய்து, ஜனங்கள் இவைகளை மந்திரம் ஜபிப் பதுபோல் இடைவிடாது நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். உபதேசமாவது "ஜெர்மானியர்களைவிட வேறு பலிஷ்டர்கள் உலகத்தில் கிடையாது. நாகரீகத்தில் பிறர்கள் ஜெர்மானியருக்குத் தாழ்ந்தவர்கள். நாகரீகம், கல்வி, உயர் நோக்கங் கள், அழகிய-உயிர்-வாழ்வு இவைகளெல்லாம் உலகத்துக்கு இவர்களால் போதிக் கப்படவேண்டும். போதனைக்குட்படாதவர்களுக்கு பலாத்காரம் செய்து போதிக்கவேண்டும். ஜெர்மானியரைத்தவிர மற்றவர்கள் அரசாளத் திறமை யற்றவர்கள்." இதே உபதேசம்; இதே ஜபம்.

ஜெர்மன் ஏவலாளர்கள் நடுநிலை நாடுகளில் புகுந்து, பிரிட்டனுக்குப் பலம் குன்றிவிட்டதாகப் பயமுறுத்தி, ஜெர்மனி ரக்ஷிக்கத் தயாராயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்காக எந்தப் பொய்யையும் சொல்லி ஏய்த்துவிடுகிறார்கள். பொய் வெளிப்பட்டால், ஏதோ எதிர்பார்க்காத ஸம்பவமென்று மறைத்துவிடு கிறார்கள்.

பிரசாரத்தில் மற்றொருவிதமுண்டு. அதாவது, கடைத் தேங்காயை வழிப் பிள்ளையாருக்கு உடைத்துவிடுகிறது; தனக்குச் சொந்தமில்லாததைப் பிறருக்கு தானம் செய்வது. உதாரணமாக:—தனக்கு உதவி செய்ததற்காக, தனக்குச் சொந்தமில்லாத போலண்டில் பாதியை ரஷியாவுக்குக் கொடுத்தது; இதாலிக்கு மத்தியதரைக் கடலின் ஆதிக்கத்தையும், ஸ்பெயினுக்கு ஜிப்ரால்டரையும், வட ஆபிரிக்காவையும் லஞ்சம் கொடுக்கச் சம்மதித்திருக்கிறது.

டம்பப்பேச்சானது ஐந்தாவது உபாயம். இதனால் பாமர ஜனங்கள் மயங்கி விடுகிறார்கள். இது யோசித்து, கற்பனை செய்து, நடத்தும் சூழ்ச்சி; இதை ஜனங்கள் அறிந்துகொள்ளாமல் ஏமாந்துபோகிறார்கள்.

பிரான்ஸைத் தோற்கடிக்க இந்த ஐந்து உபாயங்களும் அனுஷ்டிக்கப்பட்டன.

அனுபந்தம் III-B.

என்ன தைர்யம்!

இங்கிலாந்தின் தென்பாகத்தில் ஒரு கிராமத்தில் செஞ்சிலுவை நிதிக்குப் பணம் சேர்ப்பதற்காக ஒரு தோட்டத்தில் கொண்டாட்டமொன்று நடந்தது. அப்பொழுது ஜெர்மன் விமானங்கள் அங்கு படையெடுத்து வந்தன. அவைகளைக் கண்டு அஞ்சாது, கொண்டாட்டத்தை அதற்காக நிறுத்தாது, ஊரார்கள் நடத்தி முடித்தார்கள். இதன் விவரம் அங்கு வசிக்கும் ஒரு நண்பரால் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது:—

"வெகுவாய் ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவைகளுக்குக் குறையாது விமானங்கள் எங்கள் ஊருக்கு வந்துபோய்க் கொண்டிருக்கின்றன. கொண்டாட்ட தினத்துக்கு 6 நாட்களுக்கு முன்புதான் வெடிகுண்டு விமானங்கள் தாழப் பறந்துவந்து யந்திர பீரங்கிகளிலிருந்து குண்டுகளை வீசின. இதற்குப் பயப்படாமல் தோட்டக் கொண்டாட்டத்தை சனிக்கிழமை நடத்தினோம். மேடைகளைக் கட்டி அவைகள்மேல் காக்ஷி சாமான்கள் வைக்கப்பட்டன. பக்கங்களில் சில்லரை வேடிக்கைகள் காட்டப்பட்டன. புல் தரையில் கூத்து விளையாட்டுகள் நடந்தன. மல்பெரி மரத்தடியில் ஷேக்ஸ்பியர் செய்த 'துவாதச இரவு' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. இதற்கு அருகாமையில், கூப்பிடுதூரத்தில் 'இளவரசிச் சந்து' என்று ஒரு பாதையிருக்கிறது. இதுதான் எலிஸபெத் பால்யத்தில் உல்லாஸமாய் நடக்கும் இடமாம். பிறகு இவள் தேசத்துக்கு ராணியாகி, ஷேக்ஸ்பியரை ஆதரித்தாள். ஆகையால், எங்கள் நாடகமேடையானது 16-ம் நூற்றாண்டு இங்கிலாந்தை ஞாபகப்படுத்திற்று. அதில் 20-ம் நூற்றாண்டைச் சேர்ந்த நாங்கள் நாடகம் போட்டோம்; அந்த ஊர் பாதிரியாரின் மனைவியென்ன, டாம், டிக், ஜாய்ஸ், அன்னீ ஆகிய இவர்களென்ன எல்லோரும் முறையே ஆலிவியா, மால்வோலியோ, ஸர் டோபி, மெரையா முதலிய வேஷங்களைத் தரித்தார்கள். அன்று மழையில்லாது, வானம் களங்கமற்று சூரியன் பிரகாசித்தது. நாடகத்தைப் பார்க்க புல் தரையில் 250 பேர்கள் கூடியிருந்தார்கள். கைக் குழந்தைகளை எடுத்துக்கொண்டு சிலர் வந்திருந்தார்கள். 20, 30 குழந்தைகள் விளையாடிக்கொண்டு நாடக மேடைக்குப் போய் வேஷக்காரர்களோடு நின்றனர். விதூஷகன் 'யமனே வா, வா' என்று பாட ஆரம்பித்தபோது சத்துருவின் விமானங்கள் வந்துவிட்டதாக சங்குகள் ஒலமிட்டன. ஆனால் இதற்குப் பயந்து ஒருவராவது ஓடிப்போய்விடவில்லை. நாடகம் நடந்துகொண்டிருந்தது. மறைவிடத்துக்குக் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு பெற்றவர்கள் ஓடுவார்களென்று நினைத்தேன். ஒருவரும் போகவில்லை. மால்வோலியோ எவ்வளவு வேஷ ரூபமோ அவ்வளவு ஜெர்மன் விமானங்களும் பொய்யென்று மதித்து அந்த இடத்தைவிட்டுக் குழந்தைகளும் நகரவில்லை; பெற்றோர்களும் அசையவில்லை."

அனுபந்தம் III-C.

பிரிடிஷ் விமானப்படையும் நாவிகளின் படையெடுப்பு ஏற்பாடுகளும்.

பிரிடனில் நடந்த சண்டையைப்பற்றி ஐரோப்பா கண்டத்தில் உள்ளவர்களுடைய வியாக்யானம்.

ஜெர்மனியின் விமானபலத்தைப்பற்றி கோயரிங் அறிக்கை.

சங்கியையினால் செய்த ஒரு கடைசி முயற்சி.

(யார்க்ஷைர் போஸ்டு பத்திரிகையின் ராணுவ நிருபர் எழுதியது).

ஐரோப்பா கண்டத்தில் பர ராஜ்யவிவகார மந்திரிகள் இவ்வாரக்கடைசிச் (செப்டம்பர் மாதக்கடைசி) செய்தியில் முக்யமான அபிப்பிராயங்களை வெளியிட்டு இருக்கிறார்கள்.

பிரிடிஷ் கால்வாயின் துறைமுகங்களிலுள்ள கப்பல்களின் நிலை தளர்க்கப்பட்டதென்றும், அவைகளை மறுபடியும் ஒழுங்குப் படுத்த அநேக வாரங்கள் ஆகுமென்றும் வட பிரான்ஸ் தேசத்திலிருந்து ஹிட்லருக்குத் தகவல் கிடைத்திருப்பது ஒன்று. லிபியா தேசத்தில் இதாலியர்களைப் பின்பற்றிப்போகும் பிரஞ்சுக்காரர்களையும் சுதேசஸ்தர்களையும் பயமுறுத்த எண்ணி வட மேற்கு ஆபிரிக்காவில் யுத்தம் துவக்கும்படி கேட்டுக்கொண்டதை ஸ்பெயின் தேசம் மறுத்து விட்டதென்பது மற்றொன்று.

இவ்விரண்டு விஷயங்களும் பிரிடனிலும் எகிப்திலுமுள்ள யுத்தரங்கங்களை முக்கியமாகப் பாதிக்கின்றன. பிரிடன் வெற்றிகரமாக, ஜெர்மனியின் படையெடுப்புக்கு உபயோகப்படக்கூடிய நிலயங்களின் மேல் குண்டுகள் போட்டு சின்னபின்னம் செய்தது என்று ஜெர்மனி ஒப்புக்கொள்ளுகிறதென்பது முக்கியமான விஷயம்.

நடு நிலை உள்ளவர்கள் போடும் மதிப்பைக் கவனித்தால் ஜெர்மனியின் சாமான்கள் ஏற்றிச்செல்லும் கடற்படையானது மூன்றில் ஒரு பாகமாகக் குறைவு அடைந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான சஞ்சாரம் செய்யும் கப்பல்களும், இழு படகுகளும், பெரிய படகுகளும், சிறிய படகுகளும் உடைக்கப்பட்டன அல்லது உபயோகமற்றதாய் செய்யப்பட்டன என்று விளங்குகிறது. இந்த வாரத்தில் அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

பிரிடிஷ் கால்வாயிலிருந்த யுத்த தளவாடங்களும் குண்டு மருந்துகளும் ஐந்துக்கு இரண்டு பாகம் நாசமாயின என்று கணக்கிடப்படுகிறது. அவைகளை மறுபடியும் சேமிப்பதில், ஹாம் என்னும், எம்ஸ் என்னும் இரண்டு கால்வாய்களின் சந்தியில் போக்கு வரவு மார்க்கங்கள் மத்தியில் நன்றாய் தடை செய்யப்படுவதால், கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து பிரிடன் மேல் பலமான படை

யெடுப்புக்கு அநுகூலம் குறைச்சலென்றும், ஆனால் விமானப்படையெடுப்புக்கு இது ஒத்ததாகாது என்றும் ஏற்படுகிறது. பாய்ந்து செல்லக்கூடிய 6,000 பாம்பர்களால் எதிரிகளைத் தன்னால் தாக்க முடியுமென்று பத்திரிகை நிருபர்களுக்கு கோயரிங் சொல்லியிருக்கிறார்.

நம்முடைய செய்கை.

இந்த முக்கியமான செய்திகளை ஊர்ஜிதம் செய்துகொள்ள நம்முடைய செய்கைகளை மதித்துப் பார்ப்போம். பெரிய படகுகள் இருந்த மூன்று இடங்கள், அதாவது, கடற்கரையிலிருந்தவைகள், துறைமுகங்களிலிருந்தவைகள், இன்னும் வெகு தூரத்தில் ஒளிந்து கொண்டிருந்தவைகள், தாக்கப்பட்டன. சாமான்கள் கொண்டுபோகும் சிறிய படகுகளைக்கொண்டு பெரிய படகுகளை கடற்கரைக்கு இழுத்துக்கொண்டு கரையில் மனிதர்களை இறங்கும்படி செய்வது ஜெர்மனியின் அப்பியாசம். இம்மாதிரியான அநேக துணைப்படகுகள் தாக்கப்பட்டு அவைகளிலுள்ள சைன்யங்களோடு மூழ்கடிக்கப்பட்டன.

மேலே சொன்ன ஜெர்மனியின் பயிற்சிக்கு கலேயும் (Calais) ஸீப்ரக் (Zeebrugge) ம் முக்கியமான ஸ்தலங்கள். நம்முடைய விமானிகள் அப்படி பயிற்சி செய்யும் படகுகளை சமுத்திர மத்தியில் தாக்கியிருக்கிறார்கள். கப்பல் கட்டும் நிலயங்களெல்லாம் உடைந்த கப்பல் தூள்கள் நிறைந்திருக்கின்றன. சுமாராக மதித்தால் 20 மைல் தூரம் கடல் துறைகள் நாசமாகயிருக்கின்றன. கலேயில் பாஸீன் டிலெஸ்ட் (Bassein de L'Est) என்னும் துறைவழி, சாத்து வாசலின் நாசத்தினால் துறைமுகத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளே அகப்பட்டுக்கொண்ட கப்பல்கள் மீது வெடிகுண்டுகள் வீசப்பட்டன. பாஸீன் கார்னட் என்னும் இடம் தூளாகிவிட்டது. காப் கிரி னேயிலிருந்த பீரங்கிகள் கீழே வீழ்த்தப்பட்டன.

எல்லா துறைமுகங்களிலும் பெரிய படகுகள் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தன. கெண்ட் என்னுமிடத்தில் கால்வாயில் பெரிய படகுகள் நிற்குமிடம். இவ்விடத்தில் குண்டு மருந்துகள் நிரம்பிய பெரிய படகுகள் நாசம் செய்யப்பட்டன. பெரிய கப்பல்களும் சண்டைக்கப்பல்களும் நாசம் அடைந்தன. மைல் கணக்கான சாமான்கள் நிலயங்களில் தீ மூட்டப்பட்டது.

நிஷ்கர்ஷை செய்யக்கூடிய சண்டை.

லண்டனில் நடந்த சண்டையானது இந்த யுத்தத்தைப்பற்றி ஒரு தீர்மானத்திற்கு வரக்கூடிய ஒரு செய்கையாகும். சத்துருவின் தலை நகரத்தைத் தாக்குவது எப்பொழுதும் முக்கியமான யோசனைதான். இந்த நினைவு ஜெர்மனிக்கு அதிக பலமாகக்குடிகொண்டிருக்கிறது. இதற்குக்காரணம், சுலபமாய்க்கொண்டுவரமுடியாத தன்னுடைய ராணுவப்படையை சுலபமாக ஆகாய மார்க்கமாய்க் கொண்டுவர வெகு வாரங்களாக ஒரு ஆதாரமேற்படுத்த வேண்டி எடுத்துக்கொண்ட முயற்சி தோற்றுப்போனதுதான். எதிரியின் தலைநகரைத் தகர்த்தபின் சாம்ராஜ்யத்தை வசப்படுத்திக்கொள்ளுவதுதான் ஜெர்மனியின் தந்திரம்.

சென்ற இரண்டு வாரங்களின் சம்பவங்களை கவனிக்குமளவில் ஹிட்லருக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கிறதே தவிர ஒரு லாபமும் கிடைக்கவில்லை. ஜெர்மன் அறிவிற்கு அநுகுணமான கூட்டமாகச்சென்று தாக்குதல் என்ற எண்ணத்தை பிரிடிஷ் விமானப்படையோடு பரீக்ஷை செய்து மனம் தளர்ச்சி அடையும்படியான பிரயோஜனத்தை ஜெர்மானியர்கள் அடைந்திருக்கிறார்கள். வீடுகளை நாசமாக்குவதனாலும், பொதுஜனங்களைக் கொலை செய்வதனாலும் ஒரு லாபத்தையும் அவர்கள் அடைய மாட்டார்கள். பிரிடிஷ் விமானப் படையின் வலிமை கொஞ்சமேனும் தளர்ச்சி அடையவில்லை. ஹிட்லரின் முற்போக்குக்கு இது ஒரு பெரிய இடைஞ்சலாக ஏற்பட்டிருக்கிறது.

இது தான் லண்டனில் நடந்த இரண்டு வார யுத்தத்தின் ஸாராம்சம்.

அனுபந்தம் IV.

கதம்பம்.

1. சரித்திரத்தில் ஒரு தீர்மானம் செய்யக்கூடிய சண்டையைப் போட்டு நாம் ஜயமடைந்தோம். (மிஸ்டர் L. S. அமெரி—அக்டோபர் 27).

2. நாளைக்காவது ஒரு நாள் கிரமித்தாவது ஜெர்மனிக்கு தாத்காலியமான ஜயம் கிடைத்தபோதிலும், நாஸி ஜெர்மனி தோற்று தாழ்வு அடைவது தவறாதது. (டாக்டர் பெனஷ், லண்டன், அக்டோபர் 27).

3. எங்களுக்கு தீபாவளி சம்பந்தமாக பாணங்கள் வாங்குவதற்காக அளிக்கப்பட்ட தொகையில் நாங்கள் ஒவ்வொருவரும் ரூ 1 வீதம் லண்டன் பேரில் போடப்பட்ட வெடிகுண்டுகளினின்றும் காயமடைந்த சிறுவர்களுடையவும் சிறுமிகளுடையவும் உபயோகத்திற்காக நன்கொடை கொடுக்கிறோம். (கனம் வைஸ்ராயுக்கு ஸெகண்ட்ராபாத்திலிருந்து ஒன்பது பெயர்தெரியாத குழந்தைகள், அக்டோபர் 27).

4. இந்த யுத்தத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், தற்காலத்தில் மனுஷ்ய பலத்தைக்காட்டிலும் யந்திரங்களின் பலம்தான் முக்கியம். (லண்டனில் உள்ள அமெரிக்கா மந்திரி மிஸ்டர் ஜோஸப் கென்னடி, அக்டோபர் 27).

5. பிரிடனில் தற்சமயம் சிப்பாய்களும், பொது ஜனங்களும் தங்களுடைய முன் பராக்ரமச்செய்கைகளை நன்கு உணர்ந்தவர்கள்போல் நடந்துகொள்ளுகிறார்

கள். பின் வருகிறவர்களுக்கு ஒரு ஐதிகத்தை ஏற்படுத்தவும் முயலுகிருர்கள். இந்த ஆபத்திலிருந்து பெரிய தேசங்கள் பிழைப்பதற்கு இந்தப் பழக்கத்தையே கைக்கொள்ளவேண்டும். ('ஸின்ஸினுட்டி ஸ்டார்,' ஸெப்டம்பர் 23).

6. லிங்கனைப்போல் நாமும் சொல்லுகிறோம். நியாயமார்க்கம்தான் பலமானது என்பதில் பூர்ண நம்பிக்கையுடன் நமக்குத் தெரிந்தமட்டில் நம்முடைய கடமையைச்செய்ய நாம் துணியுவோம். (பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், அக்டோபர் 24ல் செய்த ஒலிப்பரப்பில்).

7. வெகுநாளாய் வாக்குறுதிசெய்த இங்கிலாந்தின் படையெடுப்பை நாம் எதிர்பார்க்கிறோம். அதேமாதிரி மீன்களும் எதிர்பார்க்கின்றன. (மிஸ்டர் சர்ச்சில், அக்டோபர் 21).

8. ஜெர்மானியர்கள் மனிதர்களைவிட சிரேஷ்டர்களல்ல. அவர்கள் 7-வருஷத்திற்குமுன்னுல் தயாரிக்க ஆரம்பித்தார்கள். அவ்வளவுதான். (மிஸ்டர் H. H. ஹாட்டன், அக்டோபர் 17).

9. 'காபொரட்டோ' என்னும் சம்பவத்தைப்பற்றி முஸோலினி ஒரு சமயம் சொன்னதாவது: "நான் அந்த சமயத்தில் மந்திரியாக இருந்திருந்தால் அந்த விபத்தை ஒரு பெரிய ஜெயமென்று வெளியிட்டிருப்பேன்." ('கொள்ளைக்காரர்களுக்குக்கொடுக்கும் லஞ்சம் அல்லது சண்டை' என்னும் தலையங்கத்தில் ஜெனிவீவ் டபூயி).

அனுபந்தம் V.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

15—10—40.

லண்டன் நகரமே நாசமாய் விட்டதென்றும், அயல்நாட்டுஸ்தானிகர் (தூதர்)கள் நகரத்தை விட்டுப் புறப்படத் தயாராகிக்கொண்டிருக்கிருர்களென்றும் ஒரு மாதத்துக்கு முன்னுலேயே ஜெர்மனி ஒலிபரப்பியது. ஸ்தானிகர்கள் புறப்பட்டுப் போகாததிலிருந்து இது பொய்யென்று எளிதில் வெளியாய் விட்டது. இன்று, சில மாறுதலோடு, இந்தப் பொய்யை மறுபடியும் பிரசாரித்திருக்கிறது. அயல்-நாட்டு-இலாகா ஆபீஸையாவது லண்டனுக்கு வெளியில் அமைக்கும்படி ஸ்தானிகர்கள் பிரிடிஷ் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டிருப்பதாக இன்று

சொல்லுகிறது. இதிலிருந்து கவர்ன்மெண்டு ஆபீஸ்கள் ஒன்ருவது இது வரையில் வெளியேறவில்லையென்று ஜெர்மனியின் வாயிலிருந்தே வந்து விட்டது. இது நிற்க, ஜெர்மன் பிரசார இலாகா ஏற்கனவே இரண்டுமுறை லண்டன் போய்விட்டதாகச் சொல்லிவிட்ட பொய்யைக் கவனிப்போம். அழிந்துபோன லண்டனில் ஆபீஸ்கள் எப்படி இருக்கும்? சமீபத்தில் அமெரிக்க ஸ்தானிகர்கள் போய் விட்டதாகக் கட்டிவிட்டார்களே. இதைப்பொய்யென்று ரூபிக்க, 'இதெல்லாம் பேத்தல்: எப்போதும்போல், பழைய இடத்திலேதான் எங்கள் காரியஸ்தலமிருக்கிறது' என்று, ஒரு அமெரிக்க—ஸ்தானிக—உத்தியோகஸ்தர் அக்டோபர் 20-ல் ஒலிபரப்பினர்.

16—10—40.

ஜெர்மன் ரேடியோ உண்மையானல் லண்டன் நகரம் பலதடவைகள் இடிந்து போயிருக்கவேண்டும். இப்பொழுது, கட்டடங்கள் இல்லாத இடங் களில் கட்டடங்கள் இருப்பதாகக் கற்பித்து அவைகளைத் தகர்த்து விட்டதாகச் சொல்லுகிருர்கள். லண்டன் மேல் பாகத்தில் தொழிற்சாலைகளே கிடையாது. அவைகளைத் தகர்த்ததாக ஜெர்மன் ரேடியோ சொல்லுகிறது. ஹா-ஹா ஜெர்மன் ரேடியோக்காரருக்குக்கூட இது தெரியும். முன் ஒரு சமயம், லண்டன் மேற்கு பாகத்தில் பணக்காரர்களுடைய வீடுகளும், போஜனசாலைகளும்தான் உண்டென் றும், இங்கு வசதியோடு பணக்காரர்கள் குண்டுகளுக்கு ஒளிய, தற்காப்பு நிலயங் கள் கட்டப்பட்டிருப்பதாயும், லண்டன் கீழ் பாகத்தில் வசிக்கும் ஏழைகளுக்கு இந்த நிலயங்களில் இடம் கொடுக்கமாட்டார்களென்றும் ஹா-ஹா பிரபு முன் பிரசுரம் செய்திருக்கிருர்.

17—10—40.

பிரிடிஷ் அதிகாரிகள், பிரிடிஷ் துருப்புகளுக்கு ஏற்றுமதி செய்து விடுவ தால் ஸைப்ரஸ் தீவில், ஆகாரப்பொருள்கள் குறைந்து விட்டதாக ஜெர்மனி ஒலிபரப்புகிறது. இது பொய். ஸைப்ரஸில் பஞ்சமே கிடையாது. மேலும், மத்தியதரைக் கடலிலிருந்து பிரிடிஷ் கப்பல்களை விரட்டி விட்டதாக இதாலி சொல்லுவதெல்லாம் பொய்யென்றும், வேண்டுமானல் ஏற்றுமதிச் சரக்குகளை பிரிடன் இக்கடல் வழியே ஏற்றிச்செல்ல முடியுமென்றும் இதிலிருந்து தெரி கிறது.

18—10—40.

பிரிடிஷ்—ஒலிபரப்பு—இலாகா—பரிசோதகர்கள் இப்பொழுது ஒரு ஜெர்மன் செய்தியை பொய்யென்று கண்டுபிடித்து விட்டார்கள். இது மிக வெட்கம்கெட்ட காரியமாயிருக்கிறது. ஏதோ சில தினங்களுக்குள், வெகு சமீபகாலத்தில் நடந்தது போல ஒரு ஜெர்மன் நாசகாரி பெரிய சண்டைபோட்டதாக, அதை நேரில் பார்த்தவரொருவர் சொன்னதாக 10½ மணிக்கு வட-அமெரிக்காவுக்கு ஸீஸன் ரேடியோ நிலயத்திலிருந்து ஒலிபரப்பியது. இதைக் கேட்டவர்களுக்கு இது ஏதோ ஏற்கனவே கேட்ட பழங்கதையாகத்தோன்றி, பரிசோதித்துப் பார்த்ததில்,

இதே ஸ்டேஷனிலிருந்து இதே செய்தி தென்-ஆசியா, கிழ-ஆசியாவுக்கு ஜெர்மன் பாஷையில், ஸெப்டம்பர் 17ல் காலை $10\frac{1}{2}$ மணிக்கும், பிறகு ப்ரெமன் ரேடியோவிலிருந்து ஸெப்டம்பர் 22-ல் காலை $6\frac{1}{4}$ மணிக்கும் ஒலிபரப்பப்பட்டிருப்பது வெளிப்பட்டது. புது சமாசாரமில்லாததால் பழைய கதையைத் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனிக்கு விமான எண்ணெய் வறண்டு போனமாதிரியாகச் சமாசாரமும் அத்துப்போய் விட்டதுபோலும்.

19—10—40.

இந்த வாரத்து ஆரம்பத்தில் மத்தியதரைக்கடலில் வெற்றியடைந்ததாக இதாலியர்கள் பொய்யொன்றைக் கட்டிவிட்டார்கள். இவர்களைவிட பொய் சொல்லுவதில் ஸமர்த்தர்களான ஜெர்மானியர்கள் 'ஐல்—அப்-வைட்'க்கு அருகாமையில் கடல் சண்டையில் வெற்றிபெற்றதாக மற்றொரு பொய்யைக் கட்டி விட்டார்கள். இந்த இடத்தில் ஒரு சண்டையும் நடக்கவில்லை. ஆனால் வேறு இரண்டு கடல் சண்டைகள் நடந்தது உண்மை. இவைகளில் ஒன்றில் சிறு பிரிடிஷ் கப்பல்களால் 4-ஜெர்மன் நாசகாரிகள் பிறர் நகைக்க விரட்டப்பட்டு, ப்ரெஸ்ட் துறைமுகத்துக்குள் ஓடி ஒளிந்தன. மற்றொரு சண்டையில், பீரங்கி ஏற்றிய ஜெர்மன் மீன்பிடிக்கும் கப்பலொன்று கவிழ்க்கப்பட்டு, அம்மாதிரியான மற்ற இரண்டு கப்பல்கள் விரட்டப்பட்டு, பிரெஞ்சுக்கரை பீரங்கிகளின் ஆதரவைத் தேடி ஓடின. பிரிடனுக்கு நஷ்டம் ஒன்றும் கிடையாது. இவை இரண்டும் சிறு சண்டைகளாயிருந்தாலும், பிரிடனுடைய கப்பல் பலத்தை நன்கு விளக்குகின்றன.

20—10—40.

பெர்லின் அடிக்கடி படையெடுக்கப்படுவது யாவரும் அறிந்த விஷயம். 'பிரிடிஷ் விமானங்கள் குறிதவறாது, பெர்லின் நகரிலுள்ள எல்லா ஆஸ்பத்திரிகளையும் எதிர்த்திருக்கிறதாக' 16-ம் தேதி ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. இதிலிருந்து பிரிடிஷ் விமானங்கள், குறி தவறாது எதிர்க்கும் சாமர்த்தியமுள்ளவைகளென்று ஜெர்மானியர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படியானால் உடைப்பதற்குத் தகுதியான எண்ணெய்சாலைகளும், விமான நிலயங்களும் இருக்கும்போது ஆஸ்பத்திரிகளைத் தாக்குவதில் பிரிடிஷ் விமானிகளுக்கு என்ன லாபம்?

மாதக்கணக்காக ஜெர்மனியும், அது பிடித்த நாடுகளும் பிரிடிஷ் விமானங்களால் எதிர்க்கப்பட்டுவருகின்றன. ஒரு நாளாவது, ஒரு ராணுவ நிலயமாவது எதிர்க்கப்பட்டதாக இதுவரையில் ஜெர்மனி ஒப்புக்கொள்ளவில்லை. 'ஜெர்மனியின் மேற்குப்பாகத்தில் ஒரு ரயில்வே பாதையை பிரிடிஷ் விமானங்கள் எதிர்த்ததாக' ஒரு ஜெர்மன் ராணுவ இலாகாசெய்தி முதல் முதலாக அக்டோபர் 21-ந் தேதி வெளிவந்தது உலகத்துக்கே விந்தையாய் இருந்தது. ராணுவ இலாகா இவ்விதம் யதார்த்த செய்தி விடுத்ததிலிருந்து இது உண்மையென்று அறியா பாலகனைப்போல் ஹா-ஹா-பிரபு 20-ம் தேதி ஒலிபரப்புகிறார்.

இதே ஒலிபரப்பில் ஹா-ஹா பிரபு, பிரிடன் அடிக்கடி ஜெர்மனிக்குள் படை எடுத்துவருவதாக ஒப்புக்கொள்ளுகிறார். இது ஏற்கனவே உலகமறிந்த விஷயம். நகரவாசிகளை பிரிடிஷ் விமானங்கள் எதிர்ப்பதாயும், அதற்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்றும் ஜெர்மனி சொல்லுகிறதே ஒழிய, அவ்விதம் இறந்த ஜெர்மன் நகரவாசிகளின் கணக்கை ஜெர்மனி பிரசுரிக்கவில்லை. ஏதோ ஒரு சமயம் பிரசுரிக்கும்போது சிறு தொகையைத்தான் கொடுக்கிறது. இது இப்படி இருக்க, 'பிரிடனில், ஜெர்மன் விமானங்கள் 18,000 ஜனங்களைத்தான் காயப் படுத்தினதாயும், அவர்களில் இறந்தது 7,000 பேர்தான் என்றும், இதனால் ஜெர்மனி நகரவாசிகளை அதிகமாக எதிர்க்கவில்லையென்றும், விசேஷமாக ராணுவ நிலயங்களைத்தான் எதிர்த்து வருவதாயும்,' வாய் கூசாமல் ஹா-ஹா பிரபு ஒலி பரப்புகிறார். என்ன வெட்கம்கெட்ட பேச்சு!

21—10—40.

நடுநிலைமை வகிக்கும் பாதுகாப்பு இல்லாத பக்ரீன் ஸமஸ்தானத்தின் மேல் குண்டு வீசின பராக்கிரமத்தைப்பற்றி இதாலியன் ஒலிபரப்பு பெருமை பீத்திக் கொள்ளுகிறது. ஸமுத்திரத்தின் வழியாகவும், பாலைவனம் வழியாகவும், மெக்கா, மெடினு ஆகிய புனித க்ஷேத்திரங்கள் அடங்கிய நடுநிலைமை நாடுகள் வழியாகவும் சென்று நடுநிலைமை வகிக்கும் பக்ரீனைத் தாக்கியது, வெற்றிகரமாக இருந்தாலும், பீத்திக்கொள்ளக் கொஞ்சமேனும் இடமில்லை.

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

15—10—40.

ஜாதி பேதத்தால், இந்தியாவில், உத்ஸவ காலங்களில், ஜனங்களுக்குள் சச்சரவுகள் ஏற்படுவது சகஜமாய் இருக்கிறது. இது யாவரும் வருந்தும் சம்பவங்கள். எவரும் அறிந்ததுதான். அக்டோபர் 10-ம் தேதி இம்மாதிரி கலகமொன்று தஸரா பண்டிகையில் மீரட்டுக்கு அருகாமையிலுள்ள காஸியாபாத்தில் நடந்து, போலீஸ்காரர்களால் அடக்கப்பட்டது. இந்த சமாசாரத்தை வைத்துக்கொண்டு ஜெர்மனி ஒரு பொய்யைக் கற்பித்திருக்கிறது. சமீபத்தில் நடந்ததாகத் தோன்றுவதற்காக 'அக்டோபர் 10-ம் தேதி'யை, 'அக்டோபர் 14' ஆக மாற்றி, நியூ டில்லியில் நடந்ததாகவும், அது ராஜீய கலகமென்றும் தனக்கு ஏற்றவாறு மாற்றி விட்டது. இந்த உதாரணத்திலிருந்து, ஜெர்மனி பொய் செய்தியை ஜோடிக்கும் மாதிரியானது புலப்படும்.

18—10—40.

பிரிடிஷ் அரசாங்கம் விமான எதிர்ப்பில் கஷ்டப்படும் ஸ்திரீகளைக் காப்பாற்ற வில்லையென்று ஒரு ஒலிபரப்பில் ஜெர்மனி குற்றம் சாட்டுகிறது, மற்றொரு ஒலி பரப்பில், 420,000 தாய்மார்களைப் பெரிய நகரங்களிலிருந்து அப்புறப்படுத்தி இருப்பதாகவும் சொல்லுகிறது. முன்னுக்குப்பின் விரோதமாயிருக்கிறது.

19—10—40.

'யுத்த ஆயுத வாரம்' என்ற ஒரு இயக்கம் பிரிடனில் சென்ற சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. யுத்தத்தை நடத்தவேண்டியதற்கான ஆயுதங்களைத் தயார் செய்வதற்காக நிதியைச் சேகரிக்க இந்த இயக்கம் ஏற்பட்டது. இதில் பணம் கொடுக்கவேண்டுமென்று கட்டாயம் ஒன்றுமில்லை. இந்த இயக்கம் பயன்படவில்லையென்று ஜெர்மனி ஒலி பரப்பியிருக்கிறது. இது பொய். பர்மிங்காம் நகரத்தில் வசூலிக்க உத்தேசித்தது 8,000,000 பவுன்; இயக்கம் ஆரம்பிப்பதற்குள்ளாகவே 4,500,000 பவுன் சேர்ந்துவிட்டது. பிராட்போர்ட் நகரத்துக்கு 1,250,000 பவுன் திட்டம் போடப்பட்டது, இரண்டு நாட்களுக்குள் 1,509,371 பவுன் வசூலாய்விட்டது.

பிரிடனுக்கு விரோதமாகப் பாலஸ்தீனத்தில் சச்சரவுகள் நடப்பதாயும், எகிப்தில் பிரிடிஷ்காரர்கள் அடக்குமுறைகளை அனுசரிக்கிறார்கள் என்றும் பல பொய்களை இதாலி கட்டிவிட்டது. இந்தச் செய்திகள் ஆல்-மிஸ்ரி, ஆல்-ஆக்ராம் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதாகச் சொல்லப்படுகிறதோடு, இதற்குத் தண்டனையாக பிரிடிஷ் சூழ்ச்சியால் ஆல்-மிஸ்ரி பத்திரிகை 10-நாட்களுக்கு நிறுத்தப்பட்டிருப்பதாகவும் சொல்லிற்று. இதற்குச் சரியான பதிலாக ஆல்-மிஸ்ரி பத்திரிகை, மேற்சொன்ன பொய்களைத் தன் இதழில் பதிப்பித்து அதன் கீழே, 'எகிப்தைப் பற்றிய பொய்களில் இதுதான் வெகு சமீபித்து வந்தது. இதன் பொய் தானே விளங்குவதால், இதை வியாக்கியானமில்லாது இங்கு பிரசுரித்திருக்கிறோம்' என்று சேர்த்து எழுதியிருக்கிறது.

21—10—40.

பர்மா—சீனா ரஸ்தாவைத் திறந்ததற்கு இந்தியர்கள் ஆதரவு அளிக்கவில்லை என்று ஹபீப் ஊர் ரகிமான் பெர்லின் ஒலிபரப்பில் பேசியிருக்கிறார். திறந்து வைத்தது சரியென்று இந்தியாவிலிருக்கும் எல்லாக் கக்ஷிக்காரர்களும், (அவர்கள் பத்திரிகைகளும்) ஒப்புக்கொள்கின்றனர். 'அக்டோபர் 17-ம் தேதி பர்மா—சீனா ரஸ்தாவைத் திறப்பதில் ஸர்வ இந்தியர்களுக்கும் சந்தோஷம்' என்று அக்டோபர் 8-ல் மௌலானா அபுல் கலாம் அஸாத் சொல்லியிருக்கிறார்.

———

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XVII.

1940—				மணி.
நவம்பர் 2,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
3,	ஞாயிற்றுக்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
		ராசியமங்கலம் ...	,,	5.30
		கீரனூர் ...	,,	5.30
4,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		பனையபட்டி ...	மாலை	5.30
		குழிபிறை ...	,,	5.30
5,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		வேகுபட்டி ...	மாலை	5.30
		புதுப்பட்டி (பொன்னமராவதி).	,,	5.30
6,	புதன்கிழமை ...	ஒடையாளிப்பட்டி ...	,,	5.30
7,	வியாழக்கிழமை ...	ராங்கியம் ...	,,	5.30
		புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம்.	,,	3.30
8,	வெள்ளிக்கிழமை.	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

பிரஸங்கம் XVIII.

9,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
10,	ஞாயிற்றுக்கிழமை.	பூவரசகுடி ...	,,	5.30
		வியாபாரிகள் சங்கம் புதுக்கோட்டை (சாந்தார்கோவில் அம்மன் சன்னதி.)	,,	6.30
11,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		ஆலங்குடி ...	மாலை	5.30
		ஆதனக்கோட்டை ..	,,	5.30
12,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		மிதிலைப்பட்டி ...	மாலை	5.30
		குடுமியாமலை ...	,,	5.30
13,	புதன்கிழமை ...	ஏம்பல் ...	,,	5.30
14,	வியாழக்கிழமை ...	பொன்னமராவதி ...	,,	5.30
		கரம்பக்குடி ...	,,	5.30
15,	வெள்ளிக்கிழமை ...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

தேவை

(புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம்).

இதற்கு ஓடும் நிலைமையுள்ள ஒரு பழைய மோட்டார் சாஸீஸ் (Chassis) தேவை.

தேசாபிமானமுள்ள கனவான்கள்
யாராவது ஒருவர்
இதை நன்கொடையாகக்
கொடுத்து உதவினால்,
அதற்கு பாடி (Body) முதலியது கட்டி
அதை நிலயத்தின்
சுற்றுப்பிரயாண அறிக்கை வண்டியாக
ஸமஸ்தானத்தில்
உபயோகப்படுத்தப்படும்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—2-11-40.